"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

தை - மாசி - பங்குனி - 2022




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 - 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative
Selected by Parliamentary
Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 30

# கலசம்
KALASAM

ஒலி 101

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# கோயிலும் கோவிட்டும்

கலசம் வாசகர்கள் அனைவருக்கும் முதலில் கலசம் குழுவினரின் பொங்கல் வாழ்த்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். 2022 ஆம் ஆண்டும், சித்திரையிற் பிறக்கவிருக்கும் சுபகிருது புதுவருடமும் நமக்கு நன்மை பயப்பதாய் அமைய இறையை இறைஞ்சுவோம்.

பத்தி வருவதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். ஒன்று படாடோபத்தால் வருவது. இன்னொன்று பயத்தால் வருவது. மூன்றாவது பழக்கத்தால் வருவது. படாடோபத்தால் வரும் பத்தியானது ஒருவர் தனது செல்வாக்கைக் காட்டுவதற்காகச் செய்வது. உள்ளத்தில் உண்மையான கடவுள் பத்தி இருப்பது சந்தேகம்; ஆனால், பார்ப்பவர்கள் தன்னை மதிக்கவேண்டும்; தான் சமூகத்தில் ஒரு பெரிய மனிதன் என்ற பிம்பத்தை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தால் வரும் பத்தி அது.

பயத்தால் வரும் பத்தி மிகவும் ஆபத்தானது. கடவுளைக் கும்பிடாவிட்டால் கடவுள் நம்மைத் தண்டிப்பார் என்ற தவறான கருத்தைக் கொள்வது. நமது சனாதன தருமத்தில் கடவுள் தன்னை வழிபடவில்லையே என்று யாரையும் தண்டிப்பதில்லை.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்."

- திருவருட்பயன்.

இந்த இருவகைப் பத்தர்கள்தான் கோவிட் காலத்திலும் கோயில்போவதைக் குறைக்கவில்லை. **கோயிலுக்குப் போவது தவறன்று; போகவேண்டாம் என்றும் நாம் சொல்லவில்லை. போவதும் நல்லதுதான்.** ஆனால் மருத்துவர்கள் சொல்லும் நடைமுறைகளைக் கவனிக்காமற் கண்டபடி போவதால், தமக்கும் நோய்தேடி, மற்றவர்களுக்கும் நோய்கொடுக்கும் ஒரு சூழலை இவர்கள் உருவாக்குகிறார்கள் என்பதே எமது ஆதங்கம். கவலைக்குரிய இந்த விடயம் கவனிக்கப்படவேண்டியது.

பழக்கத்தால் பத்தி வந்தவர்கள் கடவுளைப்பற்றிப் பயப்படுவதில்லை. அவர்கள் பொறுப்புடன் செயற்படுவார்கள். ஏனெனில் அவர்கள் கடவுளில் குன்றாத அன்பு பூண்டவர்கள்; திடமான நம்பிக்கை உடையவர்கள். கண்ணியத்தோடும் கட்டுப்பாட்டோடும் இருப்பார்கள். எனவே அவர்களின் வழியை நாமும் பின்பற்றி, சுகாதாரத்துறை சொல்லும் வழிகளையும் மேற்கொண்டு நோயைக் குறைப்பதற்கு உதவுவோமாக.

**க. ஜெகதீஸ்வரன், ஆசிரியர்**

# இந்த இதழில்

கலசம் நூறாவது இதழ் - ஒரு சிறப்புப் பார்வை 03

கலசத்தின் பயணம் 05

வினைப்பிறவி 07

குலத்தின் பெருமை - கந்தபுராணச் சிந்தனைகள் 09

திருவண்ணாமலை - பயணக் கட்டுரை 12

பதினெண் சித்தர்கள் 17

கோயிற் கட்டடக் கலை - தஞ்சைப் பெருங்கோயில் தொடர்ச்சி 29

பாம்பன் சுவாமிகள் - சென்ற இதழ்த் தொடர்ச்சி 33

கலசம் தந்த சிந்தனை 36

கிராமிய வழிபாடு 37

திருக்குறள் கதைகள் 40

விபூதி 42

அறிவோம் ஆன்மிகம் 43

கண்ணனும் தாத்தாவும் 45

**அட்டைப்படம் வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# கலசம் - "நூறாவது இதழ்"
## ஒரு சிறப்புப் பார்வை

சைவப்புலவர், சித்தாந்த இரத்தினம் க. சிவானந்தன்

“ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்க்கும்” கலசம் பத்திரிகையின் நூறாவது மின்னிதழ் கைவரப்பெற்றேன். “சைவத் தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்” என்று இவ்விதழை வர்ணிப்பது சாலவும் பொருத்தமாகும் என எண்ணுகின்றேன்.

சிதம்பரத்துக்குப் பொற்கூரை வேய்ந்தான் பிற்காலச் சோழப் பரம்பரையில் புகழ்பூத்த பெருவேந்தனாகிய முதலாம் பராந்தகன். அவனுடைய பரம்பரையில் வந்த மாமன்னர்கள் “வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடல் காவிரி”யின் சோணாட்டுக் கரைகள் தோறும் சிவாலயக் கற்றளிக் கோயில்களை எழுப்பினர். நிழல்விழாத கோபுரத்தையுடைய தஞ்சைப் பெருவுடையார் கோயிலை நிர்மாணித்த ராஜராஜன் காலத்திலும், கங்கை கொண்ட சோழனாகிய ராஜேந்திர சோழன் காலத்திலும் சைவத்தமிழ்க் கலாசாரம் தூர கிழக்கு நாடுகளாகிய ஜாவா, மியன்மார், இந்தோனேசியா, கம்போடியா ஆகிய நாடுகட்கும் பரவிற்று.

தமிழ் நாட்டில் அரச ஆதிக்கம் மாற்றார் கைபட்டுச் சைவநெறியும் செந்தமிழும் வலுக்குன்றத் தொடங்குவதற்கு முன்பாகவே, கி.பி பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய யாழ்ப்பாண இராய்ச்சியம், சைவத்துக்கும் தமிழுக்கும் ஆதரவு தருகின்ற அரச வம்சத் தினரால் தோற்றுவிக்கப்பட்டது. ஏறத்தாழ 600 ஆண்டுகள் யாழ்ப்பாணக் குடிமக்களும் அரச பரம்பரையினரும் தொடர்ச்சியாகச் சைவத்தமிழ் மரபைப் பேணி வந்துள்ளது சரித்திரம் காட்டும் உண்மை.

இலண்டன் மாநகரில் 1980களில் பெருந் தொகையான ஈழத் தமிழர்கள் குடியேறிய பின்னர், இந்நகரில் பல சைவ (தமிழ்க்) கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றோடு தமிழ் மக்களின் சைவநெறியைப் பேணி எமது திருமறை. திருமுறைகளின் மகத்துவத்தை எம்மவர்க்கு, குறிப்பாக எமது அடுத்த தலைமுறைக்கு உணர்த்த வேண்டிச் சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் “கலசம்” என்னும் இதழ் பிரசுரிக்கப்பட்டது. முப்பது ஆண்டு களாகப் பல்வேறு இடர்களைத் தாண்டி இன்று நூறாவது இதழாக மலர்ந்திருக்கும் கலசம், சைவத்தமிழ் மக்களின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றின் ஒரு தொடர்ச்சியாகும்

மணம் வீசும் நறுமலர்கள் போல் பல்வேறு கட்டுரைகளைத் தாங்கிய கலசத்தை, “சைவத்தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்” என முன்னர் குறிப்பிட்டேன். அழகான செந்தமிழிலே கட்டுரைகள் ஒன்றன் பின் ஒன்றாக விரிந்து பரந்து செல்கின்றன. “பக்திச்சுவை நனி சொட்ட” வரையப்பட்ட பல்வேறு கட்டுரைகளின் இடையிடையே கலை, வரலாறு, இசை, ஆன்மிகம் கலந்த அறிவியல் என்பன சம்பந்தமான ஆக்கங்களும் கலந்திருப்பது இன்றைய காலகட்டத்தில் மட்டுமல்லாது வேறெந்தக் காலகட்டத்திலும் வேறெந்தப் பத்திரிகையினாலும் எட்ட முடியாத வரலாற்றுச் சாதனை என்ற எனது முடிவு உயர்வு நவிற்சியின்பாற் பட்டதன்று.

ஆசிரியருடைய தலையங்கம் காலத்தின் தேவையாக இன்று மாறிவிட்ட “முறையான உச்சரிப்பு”ப் பற்றிய ஓர் எச்சரிக்கையாக இலங்குகிறது. ஆலயங்களில் வடமொழியே பூசைக்குரிய மொழியாக இருக்க வேண்டும் என்று திண்ணமாகப் பகர்கிறது முதலாவது கட்டுரை. கட்டடக்கலை, வரலாறு, தஞ்சைப் பெருங்கோயில் மூன்றையும் குழைத்து எழுதப்பட்ட கட்டுரை கட்டடக்கலை குறித்து ஆயும் வரலாற்று மாணவர்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம். சிந்தனையின் பரிமாணங்களின்

பரிணாமம், விஞ்ஞான வளர்ச்சிக்கு மட்டுமல்ல ஆன்மிக ஈடேற்றத்துக்கும் உதவும் என்று அழகாக எடுத்துரைக்கிறது ஒரு கட்டுரை. பாம்பன் சுவாமிகள் (இரண்டாம் பாகம்) வரலாற்றைப் பயபக்தியோடு இயம்புகிறது இன்னொன்று.

வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது தள்ள வேண்டிய நெறிகளையும் கொள்ள வேண்டிய முறைகளையும், நீதி மன்றத்தில் கைதேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் வாதிடுவது போல, அடுக்கிச் செல்கிறது மற்றொன்று. பன்னிரு மாணவர்களின் இறைச் சித்திரங்களைத் தொகுத்துப் “பெரிய புராணம் காட்டும் பண்பாடு” பற்றித் தெளிவான தகவல்களைத் தருவது கட்டுரையன்று; அது ஒரு களஞ்சியம்.

தமிழ்ச் சைவசமயத்தின் முதற்குருவாகிய திருஞானசம்பந்தர், ஈழத்துச் சைவத்தமிழ் மக்களின் மூச்சிலும் பேச்சிலும் கலந்துவிட்ட நாவலர் பெருமான், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புராணப் பிரசங்கியாக விளங்கிப் பட்டி தொட்டி தோறும் பக்திப்பயிர் வளர்த்த வாரியார் சுவாமிகள் மூவருமே தமக்குரிய தனித் தன்மைகளுடன் இவ்விதழில் உலா வருகிறார்கள். “மாதங்களில் நான் மார்கழி” என்று கிருஷ்ணரால் பெருமைப்படுத்தப்பட்ட மார்கழி மாதத்தின் மகத்துவத்தை மற்றொரு கட்டுரை விரிக்கின்றது. பாவலன் பாரதி பற்றிய நீண்ட கட்டுரையும், இசையரசு தண்டபாணி தேசிகர் பற்றிய குறுங்கட்டுரையும் நமது நினைவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள உதவுகின்றன. திருக்கேதீஸ்வரம், பன்றித் தலைச்சி அம்மன் கோயில் ஆகிய இரண்டு கோயில்களைப் பற்றிய விவரணக் கட்டுரைகளோடு “திருமந்திரம்” எனும் ஞானப் பெட்டகத்தைத்திறந்து “மறுமை” பற்றித் திரட்டிய சிந்தனைகள் ஆழமான பரிசீலனைக்குரியன. தமிழ் மொழியினதும் வட மொழியினதும் பிரிக்கவொண்ணாத பிணைப்பினால் விளைந்த சாத்திர, தோத்திர வடிவங்களின் பிரயோகங்கள் குறித்து வடமொழி, தமிழ்மொழிப் புலமை சான்ற குருக்கள் ஒருவர் “சைவமும் தமிழும்” என்றதோர் அரிய கட்டுரையை வரைந்திருக்கிறார். இதே போன்று ஆங்கிலத்திலும், தமிழிலும் வல்லதோர் அறிஞர் “மந்திரங்களின் வலிமை” என்ற அற்புதமான தோர் (பெரும்பாலும்) ஆங்கிலக் கட்டுரையை ஆக்கித் தந்திருக்கிறார். ஐம்பத்தேழு ஆண்டு களாகச் சிதம்பரம் நடராசரை முப்போதும் திருமேனி தீண்டிப் பூசித்த தீட்சிதப் பெருமகனார் ஒருவர் “தில்லைத் தீட்சிதர்கள் வரலாறு” பற்றிச் சொல்வதை வாசிக்கின்ற போது, அவரே நேரிலே நின்று கதை சொல்வதைக் கேட்கின்ற அநுபவம் தோன்றுகிறது.

“செய்ந்நன்றி மறவாமை” குறித்தும் தமிழர் வாழ்வில் “இசை” குறித்தும் “தியானம்” குறித்தும் மிகச்சீரிய முறையில் வடிக்கப்பட்டுள்ள கட்டுரைகள் எமது லௌகீக, இசை, ஞானப் பாரம்பரியங்கள் குறித்து என்னை இறும்பூது கொள்ள வைத்தன. தமிழர் இசைக்கருவிகளின் பாரம்பரியம் குறித்து “காலத்தால் அழியாத இசைக்கருவிகளும் எமது சமயமும்” என்று தலைப்பிட்டு 26 இசைக்கருவிகளின் அழகிய வர்ணப் படங்களோடு திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசர் பெருமானும் அருளிய பாடல்களில் உள்ள குறிப்புகளோடு வடித்திருக்கும் கட்டுரை குறுகியதாயினும் “காலத்தால் அழியாதது” என விளம்ப விழைகிறேன்.

கவிதை இல்லாமல் செந்தமிழ் இதழா? மரபுக்கவிதை ஒன்றும் புதுக் கவிதை ஒன்றுமாக இரு கவிதைகள் மலரினை அலங்கரிக்கின்றன. சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் செயலா ளரும், முன்னை நாள் கலசம் ஆசிரியரும் தனித் தனிக் கட்டுரைகள் வரைந்திருக்கிறார்கள். “அன்பே வடிவான அன்னை வாராகி” அரியபல தகவல்களைத் தந்து நிற்க “அறம் வளர்த்த தமிழ்த் தெய்வம்” என்ற அழகுக் கட்டுரை கந்த புராணக் கலாசாரத்தில் வளர்ந்த என்னைக் களிப்பூட்டிக் கண்ணீர் சோர வைக்கிறது. வழமைபோல் வண்ணப்படங்கள் ஏராளம்.

“கண்ணனும் தாத்தாவும்” இந்த முறையும் தவறாமல் வந்து இளந்தலைமுறைக்குப் புதிய பல செய்திகளைச் சொல்லுகிறார்கள். “சீகாழி பயணக் கட்டுரை” அற்புதமான பயண இலக்கியம். கோயிலின் வடிவமைப்பை அழகுற வர்ணிக்கிறார். பழுத்த அநுபவமிக்க கட்டுரை ஆசிரியர்.
நூலின் கட்டுரைகளை மாணவர்கள், இளைஞர்கள், அறிஞர்கள் எனப் பல் திறத்தினர் வரைந்திருக்கின்றனர். மிக அதிகளவு பெண்கள் வடித்த கட்டுரைகளை இம்மலர் தாங்கி நிற்கின்றது. எழுத்துப் பிழைகள் ஆங்காங்கே இருக்கின்ற போதிலும் செந்தமிழின் தரம் நெஞ்சை அள்ளுகிறது. தேவார திருவாசகப் பாடல்வரிகள், பெரிய புராணம், திருமந்திரம், திருப்புகழ், கந்த புராணம் இவற்றோடு திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம், வீரசோழியம், சிலப்பதிகாரம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆகிய நூல்களிலிருந்தும் சுட்டப்பட்ட மேற்கோள்கள் கட்டுரைகளின் தரத்தையும் மலரின் தராதரத்தையும் உயர்த்துகின்றன.
அரியதோர் முயற்சியினை மேற்கொண்டு அயராதுழைத்து இம் மலரைப் பிரசுரிக்கும் சைவ முன்னேற்றச்சங்கம், இதழ் ஆசிரியர். அவரது குழாம் அனைவரையும் எத்துணை பாராட்டினாலும் தகும். இலங்கையில் வெளிவந்த “ஆன்மீக ஜோதி”, “சிவதொண்டன்” ஆகிய நூல்களின் தரத்திலே அவற்றையும் விஞ்சும் வண்ணம் “கலசம்” மலரை வெளிக்கொணர்ந்து பிரசுரிக்கிறீர்கள். அனைத்து இதழ்களும் (நூறு) மின்பதிப்புப் பெறுமானால், சைவ சமயத்தின் வரலாற்றுத் தொகுப்பாகவே அவை அமையும். பின்னாளில் இத்துறையில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு அத்தகைய ஒரு தொகுப்பு அருஞ் செல்வமாகத் திகழும்.

அனைவருக்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் அருள் கிட்டுவதாகுக!
ஓம் நமசிவாய!

❁❁❁❁❁

# கலசத்தின் பயணம்

## மிருசுவிலூர் இளஞ்சைவப்புலவர் கமலநாதன் கயிலைவாசன்

காலத்தின் தேவையறிந்து வெளிவரும் கலசம் இதழானது நூறாவதையும் கடந்து பயணித்துக் கொண்டிருப்பது போற்றுதலுக்குரியது. இவை எல்லாவற்றுக்கும் காரணம் கலசம் நிர்வாகக் குழுவினரின் அர்ப்பணிப்பான தன்னலம் கருதாத உயர் சேவையே ஆகும். சைவ விழுமியங்கள் எங்கெல்லாம் நெறிமுறை பிறழாது பின்பற்றப்படுகின்றதோ அங்கெல்லாம் பண்பாடுடைய மனிதர்களைக் கொண்ட சமூகம் உருவாகும். அத்தகைய சமூகத்தை எல்லா இடங்களிலும் உருவாக்குவதற்கு ஏற்ற வகையிலேயே கலசம் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

கலசம் இதழின் ஆசிரியர் நூறாவது இதழில் உச்சரிப்புத் தொடர்பாக தகுந்த விளக்கம் கொடுத்து, ‘ல’ கர ‘ள’ கர பேதம், ‘ழ’, ‘ள’ எனும் எழுத்துக்கள் பயன்படுத்தப்படும் இடங்கள் போன்ற விடயங்களினை எடுத்துக் காட்டுவதனூடாக உயரிய உண்மைத் தன்மையினை வெளிப்படுத்தியுள்ளார். அது மட்டுமன்றி, ஒவ்வொரு இதழிலும் தன்னுடைய கருத்துக்கள் மூலம் பல யதார்த்த உண்மை களைக் கூறி இன்றைய சமூகத்துக்கு வேண்டிய பல அரிய விடயங்களினை அவர் முன்வைத்திருப்பதும் காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்பதை மெருகூட்டுவதாக அமைகின்றது.

சைவமும் தமிழும் எதிர்கால சந்ததியினரிடத்தில் ஆழ வேரூன்றுவதற்கு யாது செய்ய வேண்டும் என்பது பற்றிக் கலசம் கூறுகின்றது. சைவத்தமிழ்ப் பண்பாடு கொண்ட சமூகம் நின்று நிலைப்பதற்கும் படிப்பவர்கள் பயன் கொள்ளவதற்கும் தக்க வகையில் சைவத்தமிழ் பண்பாடுடைய பிரதேசங்களில் அனைவரது கரங்களிலும் கலசம் கிடைப்பது கலிபயமும் யம பயமும் நீங்கி வாழ்வதற்கு வழிவகுப்பதாக உள்ளது.

கலசம் இதழானது சிறியவர் முதல் பெரியவர் வரை படித்துப் பயன் கொள்ளத்தக்க வகையில் வெளிவருகிறது.

ஆலயத்தில் பஞ்சபுராணம் ஓதுகின்ற போது எவ்வாறு ஓத வேண்டும், சொற்பிழை விடாது இசைக்க வேண்டும் என்பதற்கும் உதாரணம் குறிப்பிட்டிருப்பதும் தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்ற உண்மையை வெளிப் படுத்துகின்றது. எனவே இவற்றைப் படிப்பவர்கள் இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம் பெறாதிருக்கப் பார்த்துக் கொள்வர்.

இவை மட்டுமல்லாது கலசத்தில் இடம்பெறும் ஒவ்வொரு கட்டுரையும் பல அரிய தத்துவக் கருத்துக்களையும் வாழ்வியல் கருத்துகளி னையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இல்லங்களில் இருந்தவாறு கட்டுரைகளைப் படிக்கின்ற போது அந்தந்த இடங்களில் நின்று நேரடியாக அநுபவிப்பது போன்ற தோற்றப்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. அது போன்று பல உயரிய சிந்தனைகளுக்கும் வித்திடுகின்றன. இவ்வாறான கலசம் இலவசமாக அனைவர் கரங்களிலும் கிடைப்பது பலருடைய அறிவுப்பசிக்கு விருந்தாக அமைகின்றது. அதுவும் நூறாவது இதழையும் கடந்து வெளிவருவதும் புலம் பெயர் நாடுகளில் மட்டுமல்லாது ஈழத்திலும் வெளிவருவது "ஆதியும் அந்தமும் இல்லாத" சைவசமயத்தின் சிறப்பினையே வெளிப்படுத்துகின்றது எனலாம்.

கலசத்தில் வரும் கட்டுரைகள் சமய, சமூக, அறிவியல் சார்ந்தவையாக வருவதனால் நிச்சயமாக சமூகத்தை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமன்றிக் கலசம் குழு வினரின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் இலங்கையில் சைவ சமூக ஆர்வலர் திரு வை. சிவனருட்செல்வர் ஐயா அவர்களும் அவரது பாரியாரும் சதாகாலமும் இவற்றைப்பற்றியே சிந்தித்து இலங்கையின் அனைத்துச் சைவத்தமிழ் பிள்ளை களிலும் சைவத்தமிழ் பண்பாடு மிளிர வேண்டும் எனும் வேட்கையோடு விரும்பிப் படிப்பவர்களுக்கு உடனுக்குடன் கிடைக்கக் கூடிய வகையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது. எனவே கலசம் நிர்வாகக் குழுவினரின் மகத்தான சேவை மேன்மேலும் தொடர்ந்து, கலசத்தின் பயணம் பாரெல்லாம் சைவத்தமிழ் பண்பாட்டை மிளிரச் செய்யும் என்ற நம்பிக்கையோடு நிறைவு செய்கின்றேன்.

## Navalar's Religious Work

In 1847, Navalar turned to preaching. He selected the Vasanta Mandapam of the Shivan Temple at Vannarponnai for this work, and delivered lectures on Friday evenings. Karthikeya Aiyer, who had been his classmate and had caught his religious spirit, became his co-worker. The subjects of lectures included the existence of God, worship of God, love of God, love of religion, Shiva pooja, Shiva Deeksha, Temple festivals, the purpose of life, the termination of life, abstinence from meat and abstinence from drinks. It happened once that Karthikeya Aiyer was unable to be present on the day fixed for him. The audience requested Navalar to take his place. He said that he was unprepared. The assembly insisted that he ought to lecture to them. He chose unpreparedness (to death) as the subject of his discourse and seemed to have done much better than on days when he had prepared the subject.

His words were not words carrying mere sense. They carried conviction and compulsion. They compelled the hearers to practice what they had heard.

Courtsey: Arumukha Navalar - S Shivapadasundaram B. A

# வினைப்பிறவி

## தில்லையூரான்

திருவாசகத்தில் “கண்ட பத்து” என்ற பதிகத்தில் மணிவாசகப் பெருமான் கீழ்க்காணும் பாடலை அருளியுள்ளார்.

**வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்**
**தனைச்சிறிதும் நினையாதே தளர்வேதிக் கிடப்பேனை**
**எனைச்சிறிதும் ஆட்கொண்டு பிறப்பறுத்த இணையிலியை**
**அனைத்துலகும் தொழும்தில்லை யம்பலத்தே கண்டேனே**

இந்தத் திருவருட் பாடலில் “வினைப்பிறவி” என்கின்ற வேதனையில் அகப்பட்டு என்ற சொற்றொடரை எமது பசுபாச அறிவைத் துணைக் கொண்டு சிந்திப்பதே இந்த கட்டு ரையின் நோக்கமாகும்.

வினை என்பது உயிர்களால் மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணங்களாலும் இயற்றப்படும் செயல்களும் அவைகளின் பயன்களும் என்று கொள்ளலாம். வினை முத்திறப்படும். அவையாவன சஞ்சிதவினை, ஆகாமிய வினை, பிராரத்தவினையாகும். சஞ்சிதவினை உயிர்களால் முற்பிறவிகளில் செய்யப்பட்டு பக்குவப்பட்டும், பக்குவப் படாமலும் இருக்கும் மொத்த வினைகளாகும். ஆகாமியவினை நாம் பிராரத்தவினையை அநுபவிக்கும்பொழுது உயிர்களின் மலச் சார்பால் யான், எனது என்ற கருத்து வேறுபாட்டால் உண்டாகும் புது வினைகள். பிராரத்த வினைகள் இறைவனால், ஆன்மா பிறவி எடுக்கும் பொழுது விதிக்கப்பட்ட வினைகள் என்பதை உணராமல், ஏதோ தங்களின் முயற்சியால் செய்யப்படும் வினைகள் என்று நினைக்கும், இவை யான் எனது என்ற ஆணவ முனைப்பால் செய்யப்படுவதால் உண்டாகும் புது வினைகள். அவைகள் எஞ்சி இருக்கும் சஞ்சித வினை களுடன் சேர்க்கப்படும். பிராரத்த வினைகள் நாம் எடுத்த பிறவியில் அநுபவத்திற்கு வரும் பக்குவப்பட்ட வினைப்பயன்களாகும். இதை விதி என்றும் நியதி என்றும் மக்கள் கூறுவர். இவ்வினைப் பயன்களை அநுபவிக்கும் பொழுது, உயிர்களுக்கு மலச்சேர்க்கையால் சுதந்திரம் கிடையாது. இதனை ஔவைப் பாட்டியார் பின்வரும் செய்யுள்களில் காட்டியுள்ளார்.

**“எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே**
**கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்**
**கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு காஞ்சிரங்காய் ஈந்ததேன்**
**முற்பவத்திற் செய்த வினை”.**

என்றும்,

**“ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் ஒன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனையாளும் ஈசன் செயல்”.**

என்றும் பாடியுள்ளார்.

இஃது இவ்வாறிருக்க வினைப்பயனை வென்ற ஞானிகள் பற்றியும் நாம் குறிப்பிடவேண்டும். மார்க்கண்டேயர், திருமூலர், காரைக்கால் அம்மையார், சுவாமி விவேகானந்தர் போன்றோர் உளர். உலகியலில் உழலும் எம்மனோருக்கு அது பொருந்தாது. வினைப் பிறவி என்ற வேதனையில் அகப்பட்டு வருந்துபவர்கள்தான் நாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் உயிர்கள் மேல் கொண்ட கருணையினால் உயிர்கள் படும் வேதனைகளையும் துன்பங்களையும் தன்மேல் ஏற்றி, எப்படி அந்த உயிர்கள் உய்தி அடையலாம் என்பதை இந்தத் திருப்பாடலில் காட்டியுள்ளார். வினைப்பிறவியில் அகப்பட்ட உயிர்கள் அவ்வினைப்பயனை அநுபவிக்கும் பொழுது அதனைத் தந்த இறைவனை நினைத்துப் பார்ப்பதில்லை. அதனால் மேலும் தளர்ச்சியுற்று வருந்துகின்றன. தவறு செய்து ஒருபிள்ளை துயரடைகின்ற பொழுது அப்பிள்ளையைப் பெற்ற தாய்தந்தையர் சும்மா பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். அதைத் தீர்க்க ஆவன செய்வர். அதுபோல கருணைக்கடலான இறைவனும் உயிர்கள் படும் துன்பத்தை நீக்க ஓடோடி வருவான்.

ஆனால் ஆணவ மறைப்பால் தானாக அறியும் ஆற்றல் இல்லாத உயிர்கள் இறைவனின் கருணையை நினைத்துப்பார்ப்பதில்லை. ஏதோ தம்முடைய முயற்சியால் தான் துயர் தீர்ந்ததென்று எண்ணி பெருமிதம் அடைவர்.

வினையைப்பற்றியும் அவைகளின் பயன்கள் பற்றியும் திருமுறைகளிலும், சித்தாந்த நூல்களிலும் பரவலாகக் கூறப்பட்டுள்ளது. முக்கியமாக சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களில் இரண்டாம் சூத்திரம் விவரமாக எடுத்து விளக்கம் அளிக்கின்றது. முதல் நூலாகிய சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்தில் இறைவன் அத்துவிதமாக உயிர்களுடன் கலந்திருக் கின்றான் என்றும் அவனின் ஆணையாகிய சிற் சக்தியால் இருவினைப் பயன்களையும் உயிர்களுக்கு ஊட்டுவித்தும் உயிர்களின் பிறப்பு இறப்பு என்ற இரண்டு நிகழ்வுகள் நடைபெறவும் அவ்வாணையிற் பிரிப்பின்றி சமவேதமாய் நிற்பன் என்றும் கூறப்பட்டுள்ளது. வழிநூலாகிய சிவஞானசித்தியாரில் இரண்டு செய்யுளில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**"இருவினை இன்பத் துன்பத் திவ்வுயிர்பிறந்திறந்து வருவது போவதாகும் மன்னிய வினைப் பலன்கள் தரும்அரன் தரணியோடு தராபதி போலத்தாமே மருவிடா வடிவும் கன்மப் பலன்களும் மறுமைக்கண்ணே"**

(தரணி - மருத்துவன், தராபதி - அரசன்)

**"தானம்செய் பொருள் தரித்தோர் செய்தவர் தக்கசெய்தி ஊனம்பின் உறவே காண்டும் பலம் உறுவிப்பான் வேண்டும்**
**ஈனமில் செய்தி ஈசன் இடும் பணி இவைநாம் செய்தால் நூனங்கள் அதிகநோக்கி நுகர்விப்பான் வினை நோய்தீர"**

(நூனங்கள் - பாவ புண்ணியங்கள் )

வினைப்பயன்கள் அறிவற்ற சடப் பொருள்களாகையால் அவை தாமே சென்று உயிர்களைச்சேரமாட்டா.

பலபிறவிகள் எடுத்து உயிர்கள் செய்யும் தவ ஈட்டத்தால் அவ்வினைகள் பக்குவப்பட்டு உயிர்கள் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற உயர்நிலை அடைந்து திருவருட்சக்தி மூலம் சிவபதமடையுமென்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. உயிர்களின் பக்குவமறிந்து இறைவன் குருவாக வந்து தீட்சையளித்து அவைகளை ஆட்கொள்ளுவான் என்று கூறுகின்றது. இதை சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் அழகாக எடுத்தியம்புகிறது:-

**"ஐம்புல வேடரில் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு அந்நிய மின்மையில் அரன் கழல் செலுமே"**

மேற்கூறிய கருத்துக்கள் எல்லாம் அடங்க திருவாசகம் கண்டபத்து என்ற பதிகத்தில் இரண்டாம் பாடலில் கூறப்பட்டிருப்பதை உணர்ந்து இன்புறுவோமாக.



# குலத்தின் பெருமை

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி ச சிவலோகநாதன்

குன்றின் மேல் வைத்த தீபம் ஒளிபெற எரிந்தாலும் பலருடைய கவனத்தையும் ஈர்க்கும்; அணைந்தாலும் பலருடைய கவனத்தையும் ஈர்க்கும். இதனாலே உயர் குலத்தில் பிறந்தவர்கள் என்றுமே கவனமாக இருக்க வேண்டும். அன்றியும் உயர்குலத்திலே பிறந்தவர்கள் நல்ல பண்பாளர்களாக இருந்தால், அது அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஒரு ஒழுங்கு முறையாகக் கணிக்கப்படுகின்றது. அவர்கள் பெரும் பாராட்டுக்குரியவர்களாகக் கருதப்படுவதில்லை. ஆனால் அவர்கள் சற்றுக் தரக்குறைவாக நடந்துகொண்டால், குலத்தின் பெருமை விவாதத்திற்கு வருகிறது. இதனாலே உயர்குலத்திலே பிறந்தவர்கள் உயர் ஒழுக்கம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லா நிற்கிறது. இந்தக் குலப்பெருமை, குலத்தில் பிறந்தவர்களின் பெருமையாக அளக்கப்படுகிறது. பெருமையின் அளவுகோலை வள்ளுவர் பின்வருமாறு வகுக்கின்றார்.

செயற்கரிய செய்வர் பெரியர் - சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

இதனைப் பார்த்தால் செயற்கரிய செய்பவர் குலப்பெருமையைத் தேடிக் கொள்கின்றனர் என்பது தெளிவாகும். இனிக் கந்தபுராணத்திலே குலப்பெருமை பேசப்படுகின்ற சம்பவங்களைப் பார்ப்போம்.

***சம்பவம் 1***

சுக்கிராச்சாரியரின் ஏவுதலின் பேரில் மாயை காசிபரை மயக்குவதற்குச் செல்கிறாள். திரு மகளின் அழகிலும் பார்க்கப் பன்மடங்கு அழகான ஒரு வடிவம் கொண்டு காசிபரின் முன் மாயை தோன்றினாள். மாயையின் அழகைக் கண்ட காசிபர் மயங்கிப் போனார். அவரைக் காம நோய் பயங்கரமாகப் பற்றிக் கொண்டது. அவர் மாயையைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டார், "பெண்ணே! திருமகளைவிடச் சிறந்தவளே! உனது வரவு நல்லது. நீ யார்? உன் குலம் யாது? உன் பெயர் என்ன? உன் ஊர் யாது?" அதற்குப் பதிலாக மாயை அவரைப் பார்த்து, "பெருந் தவத்தவரே, நீங்கள் இவ்வாறு என்னை வினவுதல் தகுதியாகாது. குற்றம் இல்லாத தவத்தை ஒழித்து மெய்யுணர்வு இல்லாத பேதை மனிதரைப்போல் பேசி என்னை நெருங்குவது முறையாகாது. நீங்கள் உங்கள் தவத்தைச் செய்யச் செல்லுங்கள்" என்று சொல்கிறாள். அதனைக் கேட்ட காசிபர், "பெண்ணே! எல்லை இல்லாத பல நாள்களாக உடல் வாட, அளவில்லாத தவம் செய்வது இம்மையிலே வேண்டியதைப் பெறுவதற்கு அன்றோ? இந்திரன் தவம் செய்தது இந்திராணியை விரும்பியன்றோ? அழகிய உடல் வாட, நான் தவம் செய்தது உன்னைச் சேர்வதற்கே. நான் விரும்பியவாறே நீ இங்கே வந்துவிட்டாய். நான் இனிமேலும் தவம் செய்ய வேண்டுமோ? நீ என்னோடு கூடவா" என்று கேட்கிறார். இவ்வாறு காசிபர் கேட்க மாயை சிரித்துவிட்டு, "தூயவரான தாங்கள் கபடமான சொற்களைப் பேசுவது முறையாகாது" என்கிறாள். கேட்ட காசிபர் தன்னுடைய குலப்பெருமையைச் சொல்கிறார். "இம்மையிவே முக்தியை அளிப்பவளே! நான் பிரம்மதேவரின் மகன். ஆதலால் சிறிதும் பொய் சொல்லமாட்டேன். வேட்கையாலே உன்னிடம் உண்மையைச் சொன்னேன். அதனைத் தெளிவாயாக".

பொய்ம்மை யாவும் புகல்கினன் நான்முகன்
செம்மல் யான்அது தேருதி போலுமால்
இம்மையே பரமீந்திடுவோய் இவண்
மெய்ம்மையே உரைத்தேன் உளவேட்கையால் -மாயைப் படலம் 75

இங்கே காசிபர் தன்னுடைய கூற்றை உறுதிப்படுத்தக் குலப்பெருமையை உபயோகிக்கின்றார்.

**சம்பவம் - 2**

சூரன் சிவபெருமானின் அருள் பெற்று மன்னர் மன்னனாக முடிசூடி ஆட்சி நடாத்தி வருகிறான். இந்திரனைச் சிறையிலிட்டு அவனுடைய மனைவி இந்திராணியை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுடைய மனதிலே தோன்றுகிறது. அசுர மங்கையரை இந்திராணியை அபகரித்து வரும்படி அனுப்புகிறான். அவர்களின் வரவை ஒற்றர் மூலம் அறிந்த இந்திரன், இந்திராணியுடன் பூலோகத்திற்கு வருகிறான். சீர்காழிப்பதியை அடைந்த இந்திரன் அங்கு நந்தவனம் அமைத்து நாள்தோறும் சிவனை வழிபட்டான். அந்த நேரத்திலே சூரனுடைய ஒற்றர்கள் எங்கும் அவனைத் தேடுகிறார்கள் என அறிந்து மூங்கில் வடிவு கொண்டு தவத்தைச் செய்து கொண்டு வாழ்க்கையை நடத்தினான். சூரனுடைய கொடுமை தாங்காத தேவர்கள் சிலர் பூமிக்கு வருகின்றனர். அவர்கள் இந்திரனைக் காண்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து இந்திரன் கைலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கிச் சூரனை அழிக்குமாறு வேண்ட நினைக்கிறான். இந்திராணி கவலையடைகின்றாள். அவளைத் தேற்றிய இந்திரன், அவளை ஐயப்ப சுவாமியின் பாதுகாப்பில் விட்டுவிட்டுக் கைலை செல்கிறான். இதே நேரத்தில் சூரனின் தங்கையாகிய அசமுகி எவ்வித கட்டுப்பாடுமின்றி அலைந்து திரிகிறாள். ஒருநாள் தன்னுடைய சிநேகிதியாகிய துர்முகி என்பவளுடன் சீர்காழிக்கு வருகிறாள். வந்தவள் தவம் செய்து கொண்டிருந் இந்திராணியைக் கண்டுவிடுகிறாள். அவளைப் பிடித்துக் கொண்டுபோய் தமையனான சூரனுடன் சேர்ப்பிக்கத் தீர்மானிக்கின்றாள். அவள் இந்திராணியைப் பார்த்து “உன் முதுமையடையாத இளமையும், குற்றம் இல்லாத பேரழகும் பயன்படாமல் வீணாகுமாறு தவம் செய்யாதே. இவ்வுலகில் உனக்கு ஒப்பானவர் யார்? இலக்குமிகூட உனக்கு ஒப்பாக மாட்டாள். ஆற்றல் மிக்க சூரபன்மன் உன்னைச் சேரத் தவமிருக்கின்றான். என்னோடு வா. நான் உன்னை அவனிடம் சேர்ப்பிக்கின்றேன்” என்று சொல்கிறாள். பெரிய கிலேசமும் துன்பமும் அடைந்த இந்திராணி அவளைப் பார்த்துச் சொல்கிறாள், “மறைகள் எல்லாவற்றையும் அருளிச் செய்த நான்முகனின் மகனான காசிப முனிவர் பெற்ற பெண்ணான நீ நீதிநெறிக்குப் பொருந்தாத சொல்லை அறிவற்றவரைப் போலப் பேசலாமா?”

வேதம் யாவையும் விதித்த நான்முகன்
காதலன் தரும் கடவுள் மங்கை நீ
நீதியில்லாத தோர் நெறியின் வாய்மையை
பேதை யாரெனப் பேசலாகுமோ

-இந்திராணி மறுதலைப் படலம் 4

இங்கே தரக்குறைான நடத்தையைக் கட்டுப்படுத்தக் குலப்பெருமை உபயோகிக்கப்படுகின்றது.

**சம்பவம் 3**

சூரன், தாயாகிய மாயையின் அறிவுறுத்தலின் பேரில் அசுர குலம் மேன்மையடைய சிவனை நோக்கிப் பெருவேள்வி செய்கிறான். சிவபெருமான் தோன்றவில்லை. தன்னுடைய உடலை

அரிந்த அரிந்து ஓமகுண்டத்தில் இடுகிறான். உடல் மீண்டும் மீண்டும் வளர்கிறதே ஒழியச் சிவபெருமான் தோன்றவேயில்லை. கடைசியாகச் சூரன் அத்தீயிலே தன்னுடைய உயிரையே அர்ப்பணிக்கின்றான். சூரன் இறந்ததைக் கண்ட சிங்கமுகாசுரன் கலங்கிப் போனான். "மாயை பெற்ற மகனே! பெருந்தவஞ் செய்கின்ற காசிபமுனிவருடைய அன்புப் புதல்வனே! அசுரகுலத் தலைவனே! நான் உன்னை உடலுடன் கூடியிருக்கக் காணேன்! ஏங்கே ஒளிந்து கொண்டீர்? பலகாலம் வேள்வி செய்து பெற்ற பலன் இதுதானோ?" என்று அரற்றகிறான்.

மாயை தரும் புதல்வா மாதவம்செய் காசிபற்கு
நேயமுருகா நிருதர் குலத்திறைவா
காயமுடன் நின்னை யான் காணேனால் எங்கொளித்தாய்
தீய மகம் பலநாட் செய்து பெற்ற பேறிதுவோ

-அசுரர்யாகப் படலம்.94

இங்கே பேரிழப்பு வரும்போது குலப்பெருமை பேசப்படுகிறது. இவ்வாறு ஒழுக்கம் குன்றும்போதும் தன்னுடைய கூற்றை உறுதிப்படுத்த வேண்டும் போதும், வீழ்ச்சி தோன்றும் போதும் குலப்பெருமை ஆய்விற்கு வருகிறது. இதனாலேயே உயர் குடிப் பிறந்தோர் தம் குலப்பெருமையைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது. அன்றியும் இந்தக் குலப்பெருமையை எவ்வாறு கட்டி வளர்ப்பது, குலப்பெருமை இல்லாதவர்கள் என்ன செய்யலாம் என்ற கேள்விகளுக்கு நாலடியார் "தவம் கல்வி ஆள்வினை என்பவற்றால் ஆகும் குலம்" என்ற அடிகளின் மூலம் விடை சொல்கிறது.

# கரவெட்டி அத்துளு அம்மன் திருக்கோயில்



இக்கோயில் நெல்லியடி - கொடிகாமம் வீதியில், கோயிற் சந்தை யிலிருந்து கரவெட்டி கிழக்குச் செல்லும் பாதையில், பச்சைப் பசேல் என்ற அத்துளு வயலும் குளமும் சூழ, இராசகோபுரத்துடன் காட்சியளிக்கிறது.

கண்ணகி மதுரையை எரித்துவிட்டு வந்து தங்கிய இடங்களாக ஐதிகம் சொல்லும் இடங்களில் இந்த அத்துளு ஆலயமும் ஒன்று. கேரளத்தில் திருவனந்தபுரம் மாவட்டத்தில் அட்டுக்கல் என்ற இடத்தையும் கண்ணகி வந்து தங்கிய இடமாகவே கருதுகி-றார்கள். அங்கே மாசி - பங்குனி மாதங்களில் பகவதி ஆலயத்தில் பெண்களே கலந்துகொள்ளும் பொங்கல் வைபவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

பொதுவாகப் பெண்தெய்வங்களின் ஆலயங்களிலேயே பொங்கல் பெருமளவிற் கொண்டாடப்படும். பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் அளவில் இல்லாவிடினும், அத்துளு அம்மன் ஆலயத்திலும் வருடந்தோறும் பொங்கல் வைபவம் நிகழ்கிறது. கரவெட்டி, அதன் அயற் கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் இங்குவந்து இரவிற் பொங்கலிடுகிறார்கள்.

நீர்ப்பாளயம் என்று சொல்லப்படும் படையலுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். பொங்கல் என்றால் பொதுவாக இனிப்பான பொங்கல்தான் நினைவுக்கு வரும். ஆனால் இங்கு வயல் நிலங்களில் விளையும் காய்கறிகளையும் சேர்த்து செய்யப்படும் பொங்கல் நீர்ப்பாளயம் எனப்படுகிறது.

**தகவல்: துரை சிவபாலன்**

# திருவண்ணாமலை

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

"திருவண்ணாமலையை நினைக்க முத்தி"

இது ஒரு நடுநாட்டுத் தலம். ஆறு ஆதாரத்தில் இது மணிபூரகம்; நாபித்தலமாகும். அருணகிரி நாதர் அவதரித்த இடமுமாகும். ரமணமகரிஷி தவமிருந்து அருள் பெற்ற தலமாகும். நால்வராலும், அருணகிரிநாதர் அவர்களாலும் பாடப்பெற்ற பஞ்சபூதத் தலங்களுள் அக்னித் தலமாகும்.

திருவண்ணாமலை = திரு + அண்ணாமலை. அண்ணுதல் என்றால் நெருங்குதல் என்ற பொருள். 'அண்ணா' என்றால் 'நெருங்கவே முடியாத' என்பதாகும். ஆகவே, திருவண்ணாமலை இறைவனை அணுக இயலாத, நெருங்க முடியாத மலை என்று பொருள்படும். விஷ்ணுவும், பிரம்மாவும் அடி, முடி காணாத மலை இந்த மலை!

இறைவன்: அண்ணாமலையார், அருணாசலேஸ்வரர்.
இறைவி: உண்ணாமுலை அம்மை, அபிதகுஜலாம்பாள்.
தலமரம்: மகிழ் தீர்த்தம்: பரமதீர்த்தம்.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.

- சம்பந்தர் (தி1 ப10 பா1)

**பிரயாணம்:**

2013ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 16ஆம் திகதி, மூன்றாவது முறையாக, திங்கட்கிழமை, மார்கழி மாதப்பிறப்பில் அதிகாலை 4:30 மணிபோல் சென்றோம். கோமாதா பூசை முடிந்துவிட்டது. பின்னர் கோயிலின் உள்ளே சென்று விநாயகரை வணங்கி, மூலவரைத் தரிசிக்கச் சென்றோம். அங்கு ஒரே சனநெரிசலாக இருந்தது. வரிசையில் இணைந்து நாகாபரணத்துடன், விபூதி நெற்றியோடு இலிங்க உருவமுடைய அருணாசலேசுவரரைத் தரிசித்தோம். முதன்முறை வந்தபோது சந்நிதிக்கே சென்று அபிடேகம் பார்த்த ஞாபகம் வந்தது.

பின்னர் வெளியே சென்று பாதாளலிங்க தரிசனம் செய்தோம். கீழே படிகள் மூலம் சென்றுதான் அடைய முடியும். இது ஒரு கோயில். இங்கே சிவலிங்கம், நந்திபீடம் ஆகியவை இருக்கின்றன. இங்குதான் ரமணமகரிஷி 17 வயதில் சென்று, தவமிருந்து, சமாதியடைந்து, எலும்பு, புழு, பூச்சிகள் கடித்துச் சீழ்வடிந்தும், மெய்ம்மறந்து இறையருளில் மூழ்கி இருந்தார் என்று சொல்லப்படுகிறது.



ஆலயத்தைப் பார்க்கிறோம். 25 ஏக்கர் நிலத்தில் ஒன்பது கோபுரங்களும், ஒன்பது வாசல்களோடு, ஆறு பிரகாரங்களுடன் ஆலயம் பிரம்மாண்டமாகத் தோன்றுகின்றது. கிழக்கே உள்ள இராஜகோபுரம் 217 அடி உயரம் 11 நிலைகள் கொண்டது. இது தமிழ்நாட்டிலே மிக உயர்ந்த கோபுரமாகக் காட்சி அளிக்கிறது. கோபுரத்தில் நடனக்கலை சிற்பங்களோடு, பல சிற்பங்கள் உள்ளன.

மேற்கில் பேய்க்கோபுரம், தெற்கில் திருமஞ்சன கோபுரம், வடக்கில் அம்மணி அம்பாள் கோபுரம் உள்ளன. கிழக்குத் திசையில் மூன்று கோபுரங்களும், ஏனைய திசைகளில் இரண்டு கோபுரமுமாக ஒன்பது கோபுரங்கள் உள்ளன.

இராஜகோபுரம் மூலவரை நோக்கி இருக்கிறது. இதற்கு மூன்றாவதாக உள்ளது கிளிக் கோபுரம். இக் கோபுரம் 1553 ஆண்டு 140 அடி உயரம், 5 நிலைகளோடு அமைக்கப்பட்டதாகும். இது பழைமையும் பெருமையும் வாய்ந்தது. கோபுரத்தின் மீது கிளிச் சிற்பம் உளது. இங்குதான் அருணகிரிநாதர் கிளி உருவத்தோடு "கந்தர் அநுபூதி" எனும் மந்திர நூலை அருளினார்.




உருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்க்
கருவாய், உயிராய், கதியாய், விதியாய்க்
குருவாய், வருவாய், அருள்வாய், குகனே!

- கந்தர் அநுபூதி

கோயில் தரிசனத்தின் பின்னர் ரமணமகரிஷி ஆசிரமம் சென்றோம்.
"செயலின்மையில் செயல், செயலில் செயலின்மை" என்பது போன்ற சில பொன்மொழிகள், அம் மௌனகுருவின் அருள்மொழிகள் ஆகும். முதலில் விசாலமான அடி மரத்தொடும் பல கிளை களைக் கொண்டு வரவேற்கும்; பல வருடங்களாக இருக்கும் இலுப்பை மரத்தைக் கண்டோம். இதனடியில் அன்னதானம் கொடுப்பதாக அறிந்தோம். ஒரு பூஞ்சோலைக்குள் சென்ற அநுபவம்கிடைத்தது. சிறந்த முறையில், வெகு சுத்தமாகவும், தூய்மையாகவும் பரிபாலிப்பதை அவதானிக்க முடிந்தது. முதலில் அலுவலகம், பின்னர் கட்டடங்கள், இறுதியாக ரமணமகரிஷியின் சமாதி. சமாதியோடு சிவலிங்கமும், அவரின் தோற்றம் சிலை வடிவில் கண்டு வணங்கினோம். பலரும் அங்கு தியானம் செய்வதைக் கவனித்தோம். "அருணாசல சிவசிவ, அருணாசல சிவசிவ" என்ற ஓதல் ஓசையோடு 1950 ம் ஆண்டு இவ்வுலகத்தை விட்டு நீத்தார் இம் மகான்.

இதன்பின் அவர் வாழ்க்கைப் படங்கள், சம்பவங்கள் அடங்கிய பகுதிக்குச் சென்றோம். இவற்றைவிட, தியானம் செய்யும் பொதுக்கூடம், அன்னதான மண்டபம் போன்றவைகளையும் பார்த்தோம்.



பிராணிகளிடம் அளவற்ற அன்பு கொண்டவர் ரமணமகரிஷி. அது என்று கூறாமல் "அவன், அவள்" என்றே பிராணிகளைக் கூறுவார். பிராணிகளும், பட்சிகளும் அவர்மீது அளவற்ற அன்பு கொண்டவை. இலட்சுமி எனும் பசுமாடு தினமும் ஒரே நேரத்தில் இவரைத் தரிசிக்க வருமாம்.
பின்னர் சமாதிகள் இருக்குமிடம் சென்றோம். அங்கே பசு, ஆடு, பட்சிகள் போன்றவையின் சமாதிகளும் இருந்தன. அங்கு உள்ள வாசிகசாலை சென்று "பகவான் ரமணர்" என்ற புத்தகத்தை வாங்கினோம்.

**கிரிவலம்:**
"கிரிவலம் போங்க, போங்க" என்று மௌனகுரு ரமணமகரிஷியே கூறி இருக்கின்றார். இதனால் கிரிவலத்தின் அருள், அருமை, பெருமைகளை அறிய முடிகிறது. 2668 அடி உயரமுள்ள மலையே இங்கு லிங்கமாக - சிவனாக இருக்கிறது. இதனால் இது எமது "கைலை மலை" ஆகிவிடுகிறது. ஆலயத்தை விட அண்ணாமலையே பிரபலமானது.

கிரிவலம் 11 கி.மீ தூரம் ஆகும். மலையை வலம் வருவதற்கு சில விதிகள் உள. பாதரட்சை அணியாமல் தனியாகச் செல்லல் வேண்டும். மெல்ல மெல்லக் காலை உரசாமல் மலை உச்சியைப் பார்த்தபடி, பிறரோடு பேசாமல், சிவ சிந்தனையோடும், இளைப்பாறாமல், இடதுபக்கமாக (வலது பக்கத்தில் - மலை ஓரத்தில் சித்தர்கள் உலாவுவதாக ஐதீகம்) வலம் வரல் வேண்டும். இவை சிலவே.

ஆலயத்திலிருக்கும் விநாயகரை வழிபட்ட பின்னர் அல்லது ரமணமகரஷி ஆசிரமம் சென்றுதான் கிரிவலம் ஆரம்பிப்பர். கிழக்கில் சென்று பார்த்தால் ஒரு முகமாகவும், சுற்றிப்பார்த்தால் இரு முகமாகவும், மேற்கில் மூன்று முகமாகவும் அண்ணாமலையார் தோன்றுவார். ஓரிடத்தில் பலகையில் பஞ்சமுக தரிசனம் என எழுதியிருப்பதைக் காணலாம். இவ்விடத்தில் ஐந்து முகமான தோற்றம். இங்கு இக்காட்சியை கண்டு மெய்சிலிர்த்து மக்கள் வழிபடுவர். ஆன்மிக வாதிகள் தியானம் செய்வர். இம்முகங்கள் தான் “ஏகன், அநேகன்” இறைவன் என்பதைக் காட்டுகின்றன. மேலும், அட்டதிக்குப்பாலகர்களை லிங்கமாக, கோயில்களில் வழிபடலாம். இவர்களை விட சந்திரன், சூரியன் போன்ற சிறு ஆலயங்களையும், சமாதிகளையும் தரிசிக்கலாம். இவற்றால் நிறைந்த மலை அண்ணாமலையாகும்.

**திருவண்ணாமலை மகாதீபம்:**



கல்விச் செருக்காலும் (பிரம்மா) பண அகந்தையாலும் (விஷ்ணு) இறைவனை அடைய முடியாது என்பதை உணர்த்தும் நாள் இந்தத் தீபத்திருநாள். இவர்கள் இருவரும் அடிமுடி தேடி, இறைவனை அடைய இயலாமல், முடிவில் சிவபெருமான் சோதி ரூபமாக காட்சி கொடுத்த தினம். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் பௌர்ணமி நிலவில் வரும். நினைவில் நிற்கும் நாள் மகாதீப நாளாகும். சோதி, தீபம், தீ, யாவும் அக்னியே. அக்னியே அனைத்துக்கும் மூலம். பிறக்கும் போது தீபமாய் விளக்கேற்றுவர். அக்னி சாட்சியாக தம்பதிகளாவர். இறக்கும் போது தீயால் வெந்து ஒரு பிடி சாம்பலாவார்.

“வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி”

என மாணிக்கவாசகர் தீயை - அக்னியை இறைவனாகப் போற்றித்திருவகலில் கூறுகிறார்.

ஆலயங்களில் ஹோமத்தில் ஆகுதியாக வழங்கப்படும் பொருள்களை, சமித்துகளை அவற்றிற்கு உரிய தெய்வங்களுக்கு கொண்டு சேர்ப்பவர் அக்னி பகவான்.

திருவண்ணாமலை மகாதீபம் 17 நாள்கள் கொண்டாடப்படுகிறது. நான்காம் நாள் விமரிசையாகக் கொடியேற்ற உற்சவம் ஆரம்பித்து பத்தாம் நாள் தீப உற்சவம் நடைபெறும். தினமும் பஞ்சமூர்த்திகள் அழகாக அலங்கரிக்கப்பட்டு விதவிதமான வாகனங்களில் ஆரோகணித்து பவனி செய்து பக்தர்களைப் பரவசப்படுத்துவர். மகாதீபம் ஏற்றும் நாளன்று பரணி தீபம், அகண்டதீபம், மலை உச்சி மகாதீபம், ஏற்றுவார்கள்.

**பரணி தீபம்:**

பரணி நட்சத்திரத்தில் ஏற்றுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இவ்வைபவம் அதிகாலை மூன்று அல்லது நான்கு மணிபோல் ஆரம்பமாகும். அப்போது ஆலயத்தில் மக்கள் வெள்ளம் அலை

மோதும். மேளங்கள் இடி இடித்தது போல் ஒலிக்க, அதற்கேற்ப மணிகளும், தாளங்களும் ஓசை எழுப்பும். இச்சமயம் சிவாசாரியார்கள் மூலவரிடத்திலிருந்து முறையாகத் தீபம் ஒன்று ஏற்றுவர். இத்தீபத்தை உருத்திராட்சம் அணிந்து, தலையில் தொப்பி போன்ற கவசம் போட்டு அவர்கள் கூட்டத்தினுள் வரும் அழகே அழகு! ஒரு தட்டில் ஐந்து அகல்விளக்குகள், நெய்யோடும் ஒவ்வொரு திரியோடும் இருக்கும். இதற்கு முன் சிவாசாரியார்கள் பூசை தீப ஆராதனை செய்து, கொண்டு வந்த தீபத்தால் ஏற்றுவர். மக்கள் கோஷம் வானைப்பிளக்கும். பரணி தீபம் முன்னோருக்காக ஏற்றுவதாகும். இல்லங்களிலும் பரணி தீபம் ஏற்றுவர்.




**மகாதீப ஏற்பாடு:**

தீபத்தன்று காலை 11 மணிபோல் ஆலயத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் இருக்கும் பர்வதராஜகுலத்து மக்கள் கோயிலுக்கு வருகை புரிவர். இவர்கள்தான் ஒவ்வொரு வருடமும் உச்சிமலையில் தீபம் ஏற்றும் நற்காரியத்தைச் செய்பவர்கள். 7.5 அடி உயரமுள்ள, தீ அணுகாத செம்பு கலந்த கனமுள்ள சிவப்பு நிறமுள்ள கொப்பரைக்கு நடக்கும் பூசையில் பங்குபற்றுவர். ஏனையோர் தீபத்திற்கு ஏற்ற நெய், திரி போன்றவற்றை எடுத்துச் செல்வர். ஒரு கூட்டமே "அரோகரா அரோகரா" எனக் கோஷமிட்டு, மலை உச்சியை அடையும். கொப்பரையை நிறுத்தி 1000 மீட்டர் துணியைத் திரியாக்கிப் போடும்போது இடையில் 3000 கிலோ பசு நெய்யை ஊற்றி 5 கிலோ கர்ப்பூரம் போட்டுத் தயார் செய்வார்கள். தூர இருந்து பார்த்தால் நாங்கள் "ஐஸ்கிரீம்" வாங்கி உண்ணும் ICE CREAM CONE போல் தோற்றம் இருக்கும்.

வைபவம் மாலையில் தான் ஆரம்பிக்கும். வெளியே வரும் வாசல் மலர்களாலே அலங்கரிக்கப்பட்டிருக்கும். வாசலின் மேல் அர்த்தநாரீஸ்வரர் முகம், இருபுறம் நந்திகள், சூலங்கள் யாவும் ஒரு துணியில் வரைந்த படம் போலக் காட்சி அளிக்கும். நகர பாதுகாவலர், திரளும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவர்.

விநாயகர் நின்ற நிலையில் முதலில் தோன்றுவார். தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானையுடன் ஆடி ஆடி வருவார். இதன்பின் சிவபெருமான் பார்வதி சகிதம் ஆனந்தமாக ஆடுவார். மேலும் அம்பாள் கையில் கிளியோடு வருவார். இறுதியில் கைகூப்பியபடி சண்டேஸ்வரர் வருவார்.. இவர்கள் யாவரும் நின்ற நிலையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பிரமாதமாக தோன்றுவர். பஞ்ச மூர்த்திகள் கிளி கோபுரத்தை அடுத்த மண்டபத்திற்கு சென்று அமர்ந்து காட்சி அளிப்பர்.

**அர்த்தநாரீஸ்வரர்:**

வருடத்துக்கு ஒருமுறை அதுவும் இத்தீப நாளிலேதான் அர்த்தநாரீஸ்வரர் வெளிவருவார். வருமுன் அகண்டதீபம் ஏற்ற வாசலில் அகண்ட பாத்திரத்தில் ஏற்பாடு - நெய், திரி போன்றவையால் நடக்கும். மாலை 6 மணிபோல் பிரதோஷ நேரத்தில், யாவரும் உட்கோயிலிலிருந்து வெளியே சென்றபின்னர் அர்த்தநாரீஸ்வரர் (சிவனும் சக்தியும் சரிபாதி என்ற தத்துவம்) வலது காலில் கழலும் இடது காலில் சிலம்பும் அணிந்து உற்சவ மூர்த்தியாய் ஆடிஆடி ஆனந்தம் ஆனந்தமாக, சிவதாண்டவமாக எழுந்தருளுவார்.

ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை
காணக் கண் ஆயிரம் வேண்டாமோ?... - முத்து தாண்டவர்

அந்த ஆட்டத்தைப் பார்க்க ஆயிரம் கண்ணல்ல. பல இலட்சம் கண்கள் இங்கு பார்த்துப் பூரித்துப் பரவசம் அடையும். வருடத்திற்கு ஒருமுறை காணும் அரிய காட்சி அல்லவா?

வாசலை அடைந்தவுடன் அகண்ட தீபம் ஏற்றப்படும். உடனே மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்படும். இங்கும் போலீசார் கூட்டத்தைக் கண்காணிப்பர். வெடிகள், வாணங்கள் வானை நோக்கும். மகாதீபம் ஏற்றுவது இவ்வுலகில் இருப்போருக்காக - எமக்காக. இந்நேரம் மின்சாரம் நிற்பாட்டப்படும். இருளில் இயற்கைத் தீபத்தை, சோதியை, கண்டு ஆனந்தமயம் அடைவதற்காகத்தான். பயம் அடைய வேண்டாம்; பூர்ண சந்திரன் இருக்கிறாரே! மின்சாரம் சில நிமிடங்களில் மீண்டும் வரும். இத்தீபம் கார்காலத்தில் மழை, காற்று, இருந்தாலும் 11 நாள்கள் சோதியாய் நின்று காட்சியளிக்கும். ஏற்றியவுடன் ஒரு கழுகு மேலே பறப்பதை யாவரும் ஒவ்வொரு வருடமும் கண்டுளர். கார்த்திகைப் பெண்கள் கார்த்திகை நட்சத்திரமான நாள் இது என்றும் சொல்வர். ஆகவே, கார்த்திகேய பக்தர்களே! இதுவும் ஒரு குமர ஆலய தீபம் ஆகும்.

ஏறுமயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

திருப்புகழ் - திரு அண்ணாமலை

சோதிவடிவான இறைவன், தீபம் இருளை நீக்குவது போல், தன்னை அடைந்தவர்களின் ஆணவ இருளை (பிரம்மா - விஷ்ணு) அகற்றி அருள் புரியும் தலம் அண்ணாமலை. அண்ணாமலை புகையிரத நிலையத்திலிருந்து 2 கி.மீ தூரத்தில் கோயில் இருக்கிறது. சென்னை, வேலூர், கடலூர், சிதம்பரம், சேலம், திருச்சி, விழுப்புரம் முதலிய இடங்களிலிருந்து பேருந்து வசதிகள் உள.

# ஆரியமும் தமிழும்

கந்தபுராணத் தொடக்கத்தில் சுவாமி திருமணம் இமயத்தில் நடக்கிறது. சுவாமி மண மண்டபத்துக்கு எழுந்தருளிவிட்டார். அந்தக் கணமே முனி சிரேட்டரான அகத்தியர் பொதியத்துக்கு வருவாராயினர்.

ஆரியம் அறிவை வெளிப்படுத்தும் பாஷை. அறிவின் பயனான அன்பை வெளிப்படுத்தும் பாஷை தமிழ். இமயத்தில் ஆரியராய் இருந்த அகத்தியர், பொதியத்தில் அறிவை அன்புசெய்து தமிழ் முனியாயினர். “அருள் அன்பீன் குழவி”. இவ்வாற்றால் அன்பு அறிவீன் குழவி.

கந்தபுராண இறுதியில் திருமுருகன் திருமணம் தமிழ் முனி வாழும் பொதியச் சாரலில் நடந்தது. அத் திருமணம் “அன்பினைந்திணைக் களவு மணம்”. அருமறை மன்றல் எட்டனுள் ஒன்றாகிய கந்தருவ மணம் போன்றது இந்தக் களவு மணம்.

“அன்பினைந்திணைக் களவியல் என்னுதலிற்றோவெனின், தமிழ் நுதலிற்று” என்கிறார் “பொய்யற்ற கீரனார்”.

இவற்றால், திருமணங்கள் வாயிலாக, அகத்தியர் மூலம் ஆரியம், தமிழ் என்கின்ற இருமைகளை ஒருமை செய்து காட்டுகின்றது கந்தபுராணம்.

**நன்றி: சிந்தனைக் களஞ்சியம் - இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

# பதினெண் சித்தர்கள்

-திரு க செல்வரத்தினம்-

சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள். சித்தத்தைச் சிவன்பால் வைத்து, தமது முறையில் சாதனை படைத்துச் சமாதி அடைந்தவர்கள். சித்தர்கள் பொது வாழ்க்கைக்கு மாறாக தமக்கென்று வாழ்வு முறைகளை அமைத்து வாழ்ந்தவர்கள். அவர்கள் பேரறிவு படைத்த நிறைமொழி மாந்தராவர். மருத்துவம், யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் ஆகிய அரிய அற-ிவியலை எமக்குத் தந்தவர்கள். இவர்கள் அட்டமாசித்தி பெற்றவர்கள். மூன்று காலம் உணர்ந்தவர்கள். மூலிகைகள் கண்டு பிடித்து உடல் நோய்களுக்குச் சிகிச்சை முறைகளைத் தந்ததோடு அவர்களது தத்துவப் பாடல்கள் மூலம் உள நோய்களுக்கும் சிகிச்சை வழி முறைகளைக் காட்டிச் சென்றவர்கள்.

விஞ்ஞானம் சாதிக்க முடியாத விடயங்களை மெய்ஞ்ஞானம் சாதித்துள்ளது. சாதிக்க முடியாத, தீர்க்கமுடியாத நோய்களைத் தீர்த்து வைத்து, குண்டலினி யோகா போன்ற கலை களில் அவர்கள் ஞானமுள்ளவர்களாக இருந்துள்ளனர். மதுரைவாலை சாமி, கணபதிதாசர், உரோம ரிஷி ஆகியோரும் சித்தர்களே

பதினெண் சித்தர் என்போர், பதஞ்சலி, அகத்தியர், போகர், கமலமுனி, திருமூலர், குதம்பைச்சித்தர், கோரக்கர், தன்வந்திரி, சுந்தானந்தர், கொங்கணர், சட்டைமுனி, வால்மீகி, இராமதேவர், நந்தி தேவர், இடைக்காடர், மச்சமுனி, கருவூரர், பாம்பாட்டிச்சித்தர் ஆகியோர் ஆவர்.

**பதஞ்சலிமுனிவர்:**

பிரம தேவரின் கண்ணில் தோன்றிய பத்ரி மகரிஷிக்கும் மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக மாற்றியவரான அனுசியாவுக்கும் பிறந்த இவர் ஆதிசேடனின் அவதாரமாகத் தோன்றியவர். அவருக்கு அபாரசக்தி ஏற்பட்டது. திருச்சிக்கு அருகில் உள்ள பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் இவரது சீவ சமாதி உள்ளது. இவரது மூச்சுக்காற்றுப் படுபவர் நீறாகிவிடுவர். எனவே உருவம் காட்டாது அசரீரியாகச் செயல்படுபவர். சிதம்பரத்தில் வியாக்கிரண சூத்திரம் எழுதியவர். அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர். தமது சீடர்களுக்கு உதவ மானிட வடிவந்தாங்கித் திரைமூலம் பாடஞ் சொல்லிக் கொடுத்து வந்தார். நூறு சீடர்கள் வரை அவ ரிடம் கற்று வந்தனர். ஆர்வங்கொண்ட சீடர்கள் திரையை நீக்கிப் பார்த்தபோது நீறாகினர். மானிட வடிவம்தாங்கிக் கௌடபாதருக்கு வித்தைகளைக் கற்றுக் கொடுத்தவர். ஆதி சேடன் தோற்றத்தில் இருந்து தியானம் சமாதிநிலை ஆகியவற்றைப் போதித்தார்

.

**அகத்தியமுனிவர்:**

சீவநாடி என்னும் நூல் மூலம் நடக்கவிருக்கும் நிகழ்வுகளைத் துல்லியமாக எழுதியிருந்தார். கோவை மேட்டுப்பாளையப் பகுதியில் உள்ள சாலையில் தோகைமயில் ஆலயம் அவர் அமைத்தார். சதுரகிரியில் அமைந்துள்ள சந்தன மகாலிங்கம் கோயிலில் பதினெட்டுச் சித்தர்கள், சப்தரிஷிகள், பிரமாண்ட நந்தி ஆகியவை அமைக்கப்பட்டன. எதிரேயுள்ள குழந்தை முருகன் கோயிலைப் பார்த்து அடியார்களுக்கு உதவிவருகிறார். அற நெறிகள் பலவற்றை ஞானப்பாமாலை மூலம் விளக்கியுள்ளார். அகத்தியர் பெயரில் பலர் இருந்ததாக நம்பப் படுகிறது.

**மனமது செம்மையானால் மந்திரம்**
**செபிக்க வேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை**
**உயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை**
**நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால்**
**மந்திரம் செம்மையாமே**

**உண்ணும் போது உயிர்எழுத்தை உயரவாங்கி**
**உறங்குகின்ற போதெல்லாம் அதுவே யாகும்**
**பெண்ணின்பால் இந்திரியம் விடும் போதெல்லாம்**
**பேணிவலம் மேல் நோக்கிஅலத்தில் நில்லு**
**திண்ணிற்கா யிலைமருந்து மதுவேயாகும்**
**தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்**
**மண்ணூழி கால மட்டும் வாழ்வார் பாரு**
**மறலிகையில் அகப்படவு மாட்டார் தாமே**

**போகர்:**

மருத்துவம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம், இரசவாதமுறை, காயகல்பமுறை, சகலத்திலும் உச்சம் தொட்டவர். அகத்தியர் பாடல் ஒன்றில் சிவனே முதல் சித்தர் எனக் கூறுகிறார். எம்பெருமானே சுந்தானந்தர் முதல் சித்தர் சிவனேயென அகத்தியர் கூறியிருந்தார். சித்தர்மார் தங்களுக்குள் இறைவனைக் கண்டவர்கள். உமையம்மையை வழிபட்டு அருள் பெற்றவர். நவபாஷாணத்தால் பழநியில் தண்டாயுதபாணிக்குச் சிலை நிறுவியவர். இவர் காளங்கிநாதரின் சீடர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மந்திர மூலிகைகளைச் சேர்த்து வகார தைலம் மூலம் பொன்னைத் தயாரித்து நிறைவேற்றினார். மேலதிகமாக இருந்த பொன்னைத் தவறாகச் செயற்படுத்தாமல் இருக்கக் கிணற்றுக்குள் போட்டு, பஞ்சாட்சர மந்திரம் தெய்வங்கள் மூலம் காத்தருளினார். ஓம் நமசிவய சிவயநம – யநமசிவய - மசி-வயந – வயநமசி எனப் பஞ்சாட்ச மந்திரத்தை விளக்கி அருளினார்.

**கமலமுனி:**

இவர் போகர், திருமூலர், கருவூரர் ஆகி யோர்களை ஆசாரியர்களாகக் கொண்டு பயின்றார். இவரது சீடர்கள் குதம்பைச் சித்தர் அழுகுணிச்சித்தர் ஆவர். போகரிடம் பயின்று அட்டமா சித்திகளில் வல்லவரானார். இவரின் தவத்தைக் கலைக்க அழுகைச் சத்தம் ஒன்று கேட்டது. சென்றுபார்க்க, வணிகன் ஒருவன் தனது சொத்துக்களை விற்று, கோயில் கட்டிவரும் போது பணத் தேவை காரணமாக முயற்சி தடைப்பட்டதாக கமலமுனிவரிடம் முறையிட்டான். தவ வலிமையால் பலவித மூலிகைகள் கொண்டு வகார தைலம் மூலம் பொன்செய்து அவரது தேவைக்கு உதவினார். எஞ்சிய பொன்னைச் சுய நலத்துக்காக தீயவழியில் பயன்படுத்தாது இருக்க கிணற்றுக்குள் போட்டு மூடிக் காவல் தெய்வங்களைக் காவலக்கு நிறுத்தினார். கமலமுனி 300என்ற மருத்துவ நூலும் இரேகை சாத்திர நூலும் எழுதினார்.

**திருமூலர்:**

அறுபத்துமூன்ற நாயன்மார்களில் ஒருவராகிய இவர் நந்தி தேவரின் அருள் பெற்றவர். நாயன்மார்களில் ஒருவர் அட்டமா சித்தி பெற்றவர். கூடு விட்டுக் கூடு பாயும் ஆற்றல் பெற்ற இவர், மூலன் என்னும் இடையன் இறந்து கிடந்த வேளை, அவன் உடலில் புகுந்து பசுக்களைத் தொழுவம் வரை ஓட்டிச் சென்றவர். அத்தோடு இல்லறத்தைத் துறந்து 3000 திருமந்திரம் என்னும் ஒப்பற்ற சைவ சித்தாந்த நூலை அருளினார். தேவாரம் போல இது வழிபாட்டிலும் பாடப்படுகிறது.

**குதம்பைச் சித்தர்:**

குதம்பை என்பது ஒரு வகைக் காதணியைக் குறிக்கும். அதை அணிந்த பெண்ணை முன் நிறுத்திப் பாடியுள்ளார்.

**அண்டத்துக் கப்பால் அகன்ற சுடரினை**
**பிண்டத்துள் பார்ப்பாயடி - குதம்பாய்**
**பிண்டத்துள் பார்ப்பாயடி**

**ஆமை போலைந்தும் அடக்கித் திரிகின்ற**
**ஊமைக்கு முத்தியடி - குதம்பாய்**
**ஊமைக்கு முத்தியடி**

**தேடிய செம்பொனும் செத்துப்போனபோது**
**நாடி வருவதுண்டோ – குதம்பாய்**
**நாடி வருவதுண்டோ**

**கோபம் பொறாமைகொடுஞ்சொல் வன்கோளி**
**பாபத்துக்கு ஏதுக்கடி - குதம்பாய்**
**பாபத்துக்கு ஏதுக்கடி**

**கள்ளங்கட் காமம் கொலை கபடங்கள்**
**பாபத்திற் தள்ளுமடி- குதம்பாய்**
**பாபத்திற் தள்ளுமடி**

**காகம் கழுகு களித்துண்ணும் மேனிக்கு**
**வாகனம் ஏதுக்கடி குதம்பாய்**
**வாகனம் ஏதுக்கடி**

**கோவணத் தோடே கொழுத்தும் உடலுக்கு**
**பூவணை ஏதுக்கடி குதம்பாய்**
**பூவணை ஏதக்கடி**

**விண்ணாசை தன்னை விரும்பாத மக்கட்கு**
**மண்ணாசை ஏதுக்கடி குதம்பாய்**
**மண்ணாசை ஏதுக்கடி**

**இருந்த இடத்தில் இருந்தே அறியாமால்**
**வருந்தித் திரிவதென்னோ? குதம்பாய்**
**வருந்தித் திரிவதென்னோ?**

**காசி ராமேச்சுரம் கால் நோவச் சென்றாலும்**
**ஈசனைக் காணுவையோ? குதம்பாய்**
**ஈசனைக் காணுவையோ?**

**வெண்காயமுண்டு மிளகுண்டு சுக்குண்டு**
**உண்காயமேதுக்கடி குதம்பாய்**
**உண்காய மேதுக்கடி**

பரமேசுவரன் கடற்கரையில் பார்வதி தேவிக்குத் தாரக மந்திரத்தை விளக்கிக் கூறும்போது பார்வதிதேவி அயர்ந்து விட்டதால், அதைச் செவியுற்ற மீனின் வயிற்றுக்குள் இருந்த குஞ்சை எம்பெருமான் குழந்தையாக்கி மச்சேந்திரன் .என்ற பெயரில் பல சித்துக்களுடன் பூமியில் வளர விட்டார். ஒருநாள், தாகம் தீர்க்க வீடொன்றில் நீர் வாங்கி அருந்தும்போது தண்ணீர் தந்த மாது குழந்தைச் செல்வம் இல்லாமல் இருப்பதை அறிந்து விபூதி அவளுக்குக் கொடுத்து அதை நீரில் சேர்த்துக் குடித்து வந்தால் அக்குறை தீருமென வாழ்த்திச் சென்றார். சிலவருடம் கழிந்த பின்பு வந்து கேட்டபோது சிநேகிதி கூறியபடி அடுப்புக்குள் போட்டதாக அவள் கூறினாள். மச்சேந்திரன் அடுப்படி சென்று "கோலக்க எழுந்து வா" என்றதும் குழந்தை எழுந்து வந்து மச்சேந்திரனுடனே விரும்பிச் சென்றது.

கோரக்கர் பயபக்தியோடு ஒழுக்கத்துடன் சீடனாக குருவுக்குத் தொண்டாற்றிவந்தார். வழமையாகப் பிச்சை எடுத்து குருவுக்குக் கொடுப்பது வழக்கம். முதல் நாள் பெற்ற வடையை குரு விரும்பிக் கேட்டபடியால் அதைப்பெற அதே வீடு சென்று வடையை வேண்டி நின்றார். "கிடைக்கும் பிச்சையுடன் போவது தான் ஒழுங்கு. கண்ணைக் கேட்டால் கண்ணைக் கொடுப்பாயா?" என மாது கூறியதும் தனது கண்ணைத் தோண்டிக் கொடுத்து வடையை வாங்கிச்சென்றார். அதிர்ச்சியடைந்த குரு தமது சக்தியால் சீடனுக்குப் பழையபடி கண்பார்வை கிடைக்கவைத்தார்

சில காலஞ் செல்ல மச்சேந்திரன் கோரக்கரை விட்டு நீங்கிக் கேரளா சென்று தவ வாழ்வைத் துறந்து பிரேமளா என்னும் இளவரசியைத் திருமணஞ் செய்து வாழுங்கால் ஆண் குழந்தையும் பிறந்தது. குழந்தைக்கு மீனநாதன் எனப் பெயர் சூட்டினர்

சீடனான கோரக்கர் பிறப்புத் தந்தை மச்சேந்திரனைத் தேடி வருவாரெனத் தெரிந்து கொண்ட அரசி நாட்டுக்குள் வரும் சித்தர்மாரைக் கொன்று விடும்படி ஆணை பிறப்பித்தாள். நாடகக் கூட்டத்தினருடன் மாறுவேடம் தாங்கி மத்தளம் அடிப்பவராக அரண்மனைக்குள் வந்திறங்கினார் அவர். சிலகாலஞ் செல்ல, மச்சேந்திரன் மீனநாதனை குளிக்க வார்க்கும்படி கோரக்கரிடம் கூற அவர் குளக்கரை சென்று கல்லில் துவைத்துக் காயப்போட்டு மீனநாதன் இல்லாமல் வீடு திரும்பினார். பிரேமளாவும் மச்சேந்திரனும் ஆவேசம் அடைந்தனர். திரும்பக் குளக்கரை சென்று 108 துண்டுகளாகக் கிடந்த மீன நாதனைத் தனது சக்தியால் 108 மீனநாதர்களாக உருவாக்கி, மறுபடியும் அவர்களை ஒனறாக்கி, மீனநாதன் ஆக்கி வீட்டிற்கு கொண்டுவந்து கையளித்தார்.

சீடனுக்குப் பிறப்புக் கொடுத்த மச்சேந்திரனை அழைத்துச் செல்ல எண்ணங் கொண்டதால் கணவனை கோரக்கருடன் செல்ல அநுமதித்தாள். தங்கக் கட்டியைக் கணவருக்குக்குக் காட்டி கோரக்கரின் பையில் போட்டு அனுப்பிவைத்தாள். குருவை நல்வழிப்படுத்த, அதை எறிந்துவிட்டு வெறுங் கல்லை வைத்தார் கோரக்கர். களவு எடுத்திருக்க வேண்டுமெனச் சந்தேகப்பட்டு அவரை விலகும்படி மச்சேந்திரன் எச்சரித்தார். தங்கத்தில் ஆசை கொண்ட குருவுக்காக தங்க மலையை உருவாக்கி அவரிடம் கையளித்துவிட்டு கோரக்கர் தனியே செயற்படத் தொடங்கினார். மச்சேந்திரரின் மாயை அவரை விட்டு நீங்கியது.

கோரக்கர் கைலை அடைந்து அல்லம முனிவர் தொடர்பை ஏற்படுத்தினார். பின்பு கோரக்கர் பதறு மேட்டுக் காட்டுக்குச் சென்று தமது சக்தியால் பிரம முனியின் நட்பையும் பெற்று அவருடன் சேர்ந்து உலக நன்மைக்காக தேவர்களுக்குரிய ஐந்தொழில் செய்யும் ஆற்றலைப் பெற விரும்பினர். யாகம் செய்யும் வேளை யாககுண்டத்தில் இருந்து இரண்டு அழகிய பெண்கள் தோன்ற, அக்கினி பகவானும் வாயு பகவானும் அவர்கள் மீது காதல் கொள்ள, கோரக்கர் கமண்டலத்தில் இருந்த நீரை எடுத்து அவர்கள் மீது தெளிக்க இருவரும் புகையிலைச் செடியாகவும், கஞ்சாச் செடியாகவும் தோற்றம் பெற்றனர். அக்கினியும் வாயு பகவானும் நெருப்பும் நீருமாகச் செடிகளுடன் இரண்டறக் கலந்தனர்.

தேவர்கள் செய்யும் ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்த விரும்பியதால், அவர்கள் முழு சக்தி பெறவில்லை. பிரமமுனி கண்டு பிடித்த பிரம்ம பத்திரம் புகையிலையாகவும், கோரக்கர் கண்டு பிடித்த கோரக்கர் மூலிகை கஞ்சாவாகவும் பெயர் பெற்றன. இறந்தவர்களை எழுப்பக் கூடிய காயகல்பம் என எம் பெருமான் ஆறுதல் மொழி கூறி மறைந்தருளினார். கோரக்கர் வைத்தியம், கோரக்கர் சந்திர ரேகை என்னும் நூல்கள் ஆக்கப்பட்டன.

**கொங்கணர்:**

இவர் திருமழிசை ஆழ்வார் காலத்தவர். இவர் கொங்கு (கேரள) நாட்டைச் சேரந்தவர். போகரின் சீடராவார். போகர் 7000 நூலில் இவர் பற்றி அறியலாம். அட்டமா சித்திகளைப் பெற்றார். இரசவாத முறையில் இரும்பு செம்பு ஆகிய உலோகங்களைக் கலந்து தங்கம் உருவாக்கிப் பலருக்கு உதவினார். எனினும் மக்கள் பண ஆசையால் கெடுவதை உணர்ந்து, போகரின் ஆலோசனைப்படி அதைக் கைவிட்டு ஆகாய மார்க்கமாக குடகுமலை சென்றார். .பின்பு காட்டுவழியால் போகும் போது கொக்கு அவர்மேல் எச்சம் போட்டதால் அதைப் பார்வையால் எரித்து தற்பெருமை கொண்டார். .தொடர்ந்து சென்று வீடொன்றில் யாசகம் கேட்டு நின்றார். ஆனால் இல்லத்தரசி வாசுகி அம்மையார் கடமை முடித்து விட்டுத் தாமதித்து வந்தபோது, “யான் யாரென நினைத்தாய்?” என்று அம்மையாரிடம் கேட்டபோது, “கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!” என்று அம்மையார் கூற அதிசயித்தார். எப்படி அம்மையாருக்கு அது தெரியும் என்று அவர் கேட்க, வேடனிடம் சென்று அறியும்படி அம்மையார் கூற, தவத்தை விடத் தாய் தந்தையரே சிறந்தவர் என மனந்திருந்தி நடக்கலானார்.

மருத்துவம், கலைகள் பற்றி ஆங்காங்கே பல குறிப்புக்கள் இவரைப் பற்றிக் காணப் படுகின்றன. காப்புப் பாடல்களில் விநாயகர், சரஸ்வதி, சிவபெருமான், சுப்பிரமணியர், திருமால், நந்தீஸ்வரர் துணையெனப் பாடல்கள் உள்ளன. பாடல்கள் கும்மி மெட்டில் அமைந்துள்ளன. *111* கும்மிப்பாடல்கள் தந்துள்ளார்

காரியனாகினும் வீரியம் பேசவும்
காணா தென்றவ்வை சொன்னாளே
பாரினிலே வம்புகள் செய்யாதே புளிப்
பழம்போ லுதிர்ந்து விழுந்தானே!

காசார் கள்பகை செய்யாதே நடுக்
காட்டுப் புலி முன்னே நில்லாதே
தேசாந்தி ரங்களுஞ் செல்லா தேமாய்கைத்
தேவடி யாள் தனம் பண்ணாதே

ஆடுங்கள் பெண்டுகளெல்லோ ருமந்த
அன்பான கொங்கணர் சொன்னதமிழ்-
பாடுங்கள் சித்தர் களெல்லலோ ரும்வாலை
பரத்தைப் போற்றிக் கொண்டாடுங்கடி1

**சட்டை முனிவர்:**
இவர் கொங்கணர், போகரின் சீடராவார். பிச்சை பற்றி விளக்கம் பெற்றார்.

பிறந்தது முதல் பெற்றோர் இட்ட பாசப் பிச்சை, பின்பு மனைவி இடும் சுகப் பிச்சை, முதலாளி இடும் தயவுப் பிச்சை, சொந்தக்காரர் இடும் உறவுப்பிச்சை, இறக்கும் தறுவாயில் தெய்வத்திடம் பாவ புண்ணிய பிச்சை என வாழ்வே பிச்சை வாழ்வு என விளக்கம் பெற்றதோடு உலகத்துக்கும் அறிவித்தார்.

கருவூரரின் தொடர்பும் கிடைத்தது. திருவரங்கம் அரங்கர் கோயில் சென்று தரிசனம் கண்டார். வாசற்கதவு மூடி இருந்ததால் இறைவனை வேண்ட, கதவு திறந்தது உள்ளே செல்ல அம்மனுடைய மேனி ஆபரணங்கள் இவரது மேனியில் வரவும், ஆலய மணிஓசை திடீரெனக் கேட்டதும், ஆலய நிர்வாகம் இவர் களவெடுத்திருக்க வேண்டுமென ஐயற்று அரசனிடம் கொண்டு சென்றனர். நடந்தவற்றை அவர் கூற, ஆலயத்தில் அவர் மேல் நகைகளை போட்டுக் கழற்றியதும் மறு படியும் நகைகள் அவரது மேனியில் ஏறின. உண்மையை உணர்ந்து ஏனையோர் அவரிடம் மன்னிப்புக் கோரினர்.

பாழான மாய்கைசென் றொழிவ தெப்போ? -
பரந்தமனஞ் செவ்வையாய் வருவ தெப்போ?
வாளான விழியுடைய பெண்ணைச்சேரும்
மயக்கமற்று நிற்ப தெப்போ? மனமே ஐயோ!
காழான உலகமத னாசை யெல்லாங் -
கருவறுத்து நிற்பதெப்போ? கருதி நின்ற
கோளான கருவி விட்டு மேலே நோக்கிக் -
கூடுவது மேதென்றால் மூலம் பாரே

**இராம தேவர்:**
நாகபட்டினத்தில் பிறந்த இவர் அட்டமா சித்துக்களைக் கைவரப் பெற்றவர். இவர் சட்டைமுனியோடு காசி போய் விக்கிரகம் கொண்டுவந்து அம்மன் ஆலயம் கட்டியதாகக் கூறப்படுகிறது சஞ்சாரசமாதி முறையில் உடலை மாற்றாமல் தனது தூல உடம்போடு போய் வருபவர். இவர் மெக்காவுக்கு போய் யாக்கோபு பெயரில் வாழ்ந்து மீண்டும் சதுர கிரி வந்து சமாதிஅடைந்தார் இவர் இராம தேவர் வைத்திய காப்பியம், நிகண்டு, அட்டாங்க யோகம் என 18 நூல்கள் எழுதியுள்ளார். இவரது கோயிலும் சமாதியும் அழகர்மலைப் பகுதியில் உள்ளது.

**.கருவூரர்:**
கருவூரில் பிறந்த இவர் சாதிவேறு பாடுகளை எதிர்த்தவர். ஆதிபராசக்தியை வாலைப் பெண்ணாகச் சித்திரித்து, அவளைப் பல வடிவங்களாக்கிப் பூசை செய்யும் முறைகளை விளக்கியுள்ளார்.

தஞ்சைப் பேரரசன் இராசராசன் கட்டியபெரிய கோயிலின் சிவலிங்க பிரதிட்டையில் இவரே அட்டபந்தனம் செய்தவர். இவரது பாடல்கள் திருவிசைப்பா பாடல்களாக ஒன்பதாம் திரு முறையில் உள்ளன. அகத்தியர், கொங்கணர், போகர் ஆகிய மூவரின் நூல்களில் இவரைப் பற்றித் தகவல்கள் காணப்படுகின்றன.

பாரேது? புனலேது அனலுமேது
பாங்கான காலேது? வெளியுமாகும்
நாரேது? பூவேது? வாசமேது?
நல்ல புட்பந்தா னேது? பூசை யேது?
ஊரெது? பேரேது? சினமு மேது ?
ஓகோகோ அதிசயந்தா னென்ன சொல்வேன்!
ஆறேது? குளமேது? கோயி லேது
ஆதிவத்தை யறிவதனா லறியலாமே

சொல்வதற்கிங்கு இவளையலால் சுகம் வேறுண்டோ
சூட்ச மெல்லாம் இவளைவிடச் சூட்ச முண்டோ
நல்லவர்க்கு நடுவில் விளை யாடும் வல்லி
நாதவிந்து ஓங்கார நிலையுங்காட்டி
வல்லவர்க்கு வல்லவளாம் நானே என்பாள்
வரமவர்க்கும் வேணதெல்லாம் வழங்கும் ரூபி
புல்லருக்கிங் காயுதமும் புல்லேயாகும்
புத்திகெட்ட லோபிகட்குப் புகலொணாதே

**பாம்பாட்டிச்சித்தர்:**

செத்த பாம்பு ஒன்றை ஆடவைத்துக்காட்டினார் என்பதால் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இவர் இயற்றிய பாடல் வரிகளால் அவரது வல்லமைகளைக் காண முடிகிறது. சட்டைமுனி சித்தரிடம் தீட்சை பெற்றவர் எனக் கூறப்படுகிறது.

நாதர்முடிமேல் இருக்கும் நாக பாம்பே
நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே
பாதலத்தில் குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடி நின்று விளையாடு பாம்பே


குற்றமற்ற சிவனுக்கு குண்டலமானாய்
கூறுந் திருமாலினுக்குக் குடையுமானாய்
கற்றைக் குழல் பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமல் உளங்களித்து ஆடு பாம்பே

மண்டலத்தைத் தாங்குமிக வல்லமை கொண்டாய்
மாயனது படுக்கைக்கு வண்ணப் பாயானாய்
கண்ட படை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்
கண்ணே செவியாகக் கொண்டாய் ஆடு பாம்பே

இவர் குரு வணக்கம், சித்தர் வல்லபம், பொருளாசை விலக்கல், பெண்ணாசை விலக்கல், உடலின் குணம், அகப் பற்று நீக்கல் பற்றிப் பல நூறு பாடல்கள் எழுதியுள்ளார்.

சித்தர்கள் பாடல்களைப் படிக்கும் பழக்கம் பரவ வேண்டும். சித்தர்கள் இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆகவே மேற்கூறியவர்களை மட்டும் பதினெண் சித்தர்கள் என்று வரையறுக்க முடியாது. பட்டினத்தார், சிவவாக்கியர், பத்திர கிரியார், மதுரைவாலை சாமி,கணபதிதாசர், உரோமரிஷி, இராமலிங்க அடிகள், போன்றோரும் சித்தர்களே!

ஈழத்தில் குடைச்சாமி, செல்லப்பா சுவாமி, யோகசுவாமி போன்றோரும் எம் மத்தியில் வாழ்ந்து மறைந்தும் அருள்பாலித்து வருகின்றார்கள் சித்தர்களின் குருபூசைத் தினங்களில் வழிபட்டு எம்மைச் செம்மைப் படுத்தி வளம் பெறுவோம்.





SIVAYOGAM

# இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk





**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்



"Ammanai Saran Adainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAM (HINDU) TEMPLE TRUST**

Founded on 10 - 08 - 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE | TEL: TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org | Email: info@ammanealing.org

## புத்தாண்டில் உதயமாகிறது

# தியான மண்டபம்

அம்பிகையின் திருவருளினால் நீண்ட முயற்சியின் பயனாய்
கைகூடிய இத் தெய்வீகத் திருப்பணியில்

**உங்களின் கரங்களையும்**

இணைய வேண்டி நிற்கின்றோம்
இத் தியான மண்டபத்தில்

**Elder's Day Centre**

ஆரம்பிக்கப்பட்டு தியானப் பயிற்சியுடன் கூடிய
அனைத்து உதவிகளும்
நிபுணத்துவம் மிக்கவர்களால் அளிக்கப்படும்
இப் புனிதப் பணியில்
கைகோர்க்கும் அடியவர்களில்

**£1000 பவுண்களிற்கு மேல்**

**அன்பளிப்பு செய்பவர்களின் பெயர்கள்**

**மண்டப சுவர்களில் பொறிக்கப்படும்**

PLEASE **DONATE** TO OUR MILESTONE PROJECT

**"MEDITATION HALL"**
**(ELDER'S DAY CENTRE)**

**Bank Details: SKTA Temple Trust**

LLOYDS BANK | SOFT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள்
அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**



"Ammanai Saran Adainthal Athika Varam Peralam"

## SHRI KANAGA THURKKAI AMMAM (HINDU) TEMPLE TRUST

Founded on 10 - 08 - 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE | TEL: TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org | Email: info@ammanealing.org

அம்பிகையின் திருவருளைப் பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம்

## செய்ய அரிய வாய்ப்பு

உங்கள் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்

பிறந்தநாள், திருமணநாள், நினைவுநாள் மற்றும்

உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்

உங்களின் £100 பங்களிப்பு

**பலபேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்**

இப் புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

## YOU CAN CONTRIBUTE FOOD

**DONATION £100**

NO ADMINISTRATION CHARGES

**To Orphanages or Elders Home in Sri Lanka**

On your Birthday, Wedding Day Remembrance Day or Any other Special Function

**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SOFT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646**

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள்

அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட நாள்கள்

## ஜனவரி (14-01-2022) தொடக்கம் ஏப்பிரில் (26-04-2022) வரை

| | | |
|---|---|---|
| *14.01.2022* | வெள்ளி | தைப்பொங்கல் |
| *15.01.2022* | சனி | பிரதோஷம் |
| *18.01.2022* | செவ்வாய் | தைப்பூசம் |
| *19.01.2022* | புதன் | யோகசுவாமி வழிபாடு |
| *29.01.2022* | சனி | பிரதோஷம் |
| *13.02.2022* | ஞாயிறு | பிரதோஷம் |
| *15.02.2022* | செவ்வாய் | நடராஜர் அபிஷேகம் |
| *16.02.2022* | புதன் | மாசி மகம், யோகசுவாமி வழிபாடு |
| *28.02.2022* | திங்கள் | மகாசிவராத்திரி விரதம், பிரதோஷம் |
| *15.03.2022* | செவ்வாய் | பிரதோஷம், யோகசுவாமி வழிபாடு |
| *18.03.2022* | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| *21.03.2022* | திங்கள் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| *29.03.2022* | செவ்வாய் | பிரதோஷம் |
| *02.04.2022* | சனி | வசந்த நவராத்திரி ஆரம்பம் |
| *10.04.2022* | ஞாயிறு | வசந்த நவராத்திரி பூர்த்தி |
| *11.04.2022* | திங்கள் | யோகசுவாமி வழிபாடு |
| *14.04.2022* | வியாழன் | சுபகிருது வருடப்பிறப்பு |
| *16.04.2022* | சனி | சித்திரைப் பௌர்ணமி |
| *24.04.2022* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| *26.04.2022* | செவ்வாய் | திருநாவுக்கரசர் குருபூசை |

**பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.**

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

**காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை**
**மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை**

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel : 020 8514 4732  Fax: 01268 561805

**www.saivamunnettasangam.com  smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**


# MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | | ☐ Life £150 |
| Town<br>Post code | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payme
for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazin

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means tha £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASC's I donate to, will reclaim on n gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understan the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# கோயிற் கட்டடக் கலையின்...

## தஞ்சைப் பெருங்கோயில் - சென்ற இதழ் தொடர்ச்சி

**திரு மு க மாசிலாமணி B.A**

"தமிழ்வேதம்" எனச் சைவத் தமிழ் இலக்கியமான பெரிய புராணம் விதந்து போற்றுவதும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய முதலிகளால் பாடப்பட்டவையும் தில்லைச் சிதம்பரம் கோயிலில் அடக்கம் செய்யப்பட்டிருந்தவையுமான தேவாரத் திருப்பதிகங்களைப் பதினோராம் திரு முறையின் ஆசிரியர்களில் ஒருவரான நம்பியாண்டார் நம்பி மூலமாக வெளிக் கொணர்ந்ததுடன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய பண்ணிசை வல்லுனரைக் கொண்டு தேவாரங்களுக்குப் பண் வகுப்பித்தும் சைவத் தமிழ் உலகிற்கு அளித்தவன் இராசராசனே. சிவனையே வழிபடும் நியமம் கொண்ட இம்மன்னன் சிவனின் பெரும்புகழை, பெருங்கருனையை, பேராற்றல்களை எல்லாம் சிறப்பாக விவரிக்கும் இவ்வின்னிசைச் செந்தமிழ் அருட்பாக்கள் எங்கும் பரவ வேண்டும்; எல்லோரும் கேட்டின்புற வேண்டும் என்ற நோக்குடன் தான் நிர்மாணித்த தஞ்சைப் பெருங்கோயிலில் நாள்தோறும் நான்கு காலப் பூசைகளின் போதும் மூவர் முதலிகளினது தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணோடு ஓதுவதற்கு 48 ஓதுவார்களையும், அவர்கள் ஓதும்பொழுது மத்தளம் முழங்க ஒருவரும் உடுக்கை வாசிக்க ஒருவருமாக ஐம்பதின்மரை - 50 - நியமித்து அவர்களுக்கு விளை நிலங்களும் வேறு செல்வங்களும் அளித்துத் தேவாரத் திருமுறைகள் திருக்கோயில் வழிபாட்டில் முதலிடம் பெற இராசராசன் மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகள் பற்றி அக்கோயிற் கல்வெட்டுப் பதிவுகளில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இராசராசன் திருமுறைகளை வெளிக் கொணர்ந்து அவை திருக்கோயில்களில் ஓதப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்பே அவனுக்கு முன்பு ஆண்ட சோழ அரசர்களினால் தில்லை, திருநல்லம், திருவாவடுதுறை, திருவீழிமிழலை, திரு வொற்றியூர், திருவானைக்கா போன்ற திருக்கோயில்களில் திருமுறை ஓதுவதற்கு ஓதுவார்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நிவந்தங்கள் அளித்துச் செயற்பட்டமை பற்றி அறிய முடியுமாயினும் இராசராசன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுப்பித்தும் தான் நிர்மாணித்த தஞ்சைப் பெருங்கோயிலுக்கு மட்டும் 48 ஓதுவார்களைப் பெரும் எண்ணிக்கையில் நியமித்தும் கோயில் வழிபாட்டில் தேவாரத் திருமுறைகளுக்குச் சிறப்பிடம் அளித்தான். பின்னரே தமிழ் நாட்டில் தேவாரத் திருமுறைகளுக்கான செல்வாக்கு அதிகமாயிற்று. தஞ்சைப் பெருங்கோயிலைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் பல கோயில் களுக்கும் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுத் தினசரி பூசை வழிபாட்டின் போது தேவாரம் ஓதுவதும் இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படும் பல உபசாரங்களில் ஒன்றாகச் சிறப்புப் பெற்றது. கோயிலில் தேவாரத் திருமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த இராசராசன் கோயிலில் இடம்பெறும் விசேட விழாக்களின் போதும் நடனம் ஆடுவதற்கு ஆடல், பாடல்களில் ஆற்றல் மிக்க 400 நடனமாதரை நியமித்து அவர்களுக்கும் நிவந்தம் அளித்துத் தேவாரத் திருமுறைகள் போன்ற பக்திப் பாடல்களைப் பாடி அவற்றை நடனமாக ஆடிக் கோயில் திருவிழாக்கள் சிறக்கச் செய்தான். இவ்வாறு பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் பாடப்பட்ட தேவாரத் திருமுறைகள் அவர்களுக்குப் பின் சோழர் ஆட்சிக் காலத்தில் "திருமுறை கண்ட இராசராச தேவர்" என விதந்து குறிப்பிடப்படும்

இராசராசன் காலத்திலிருந்து தமிழ்நாட்டில் போற்றப்பட்டன போன்ற பல செய்திகள் தஞ்சைப் பெருங்கோயிற் கல்வெட்டுக்களில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளும் தஞ்சைக் கோயிலை மையமாகக் கொண்டு வளர்வதற்கு இராசராசன் மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றியும் அக்கோயிற் கல்வெட்டுக்கள் விளக்கமாகப் பல தகவல்களைத் தெரிவிக்கின்றன.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் “தெட்சிண மேரு” என்ற *216* அடி உயரமுடைய நெடிதுயர்ந்த விமானம் முழுவதும் பொற்தகடுகள் பதிக்கப்பட்டுப் பொற்கிரியாக விளங்கியதென்றும் பாரதத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைப் பெரிய கோயிலொன்றுதான் பொற்கோயிலாக திகழ்ந்தது என்றும் கூறப்படுகின்றது. இச்செய்தியினை நாயக்கர் காலப் புலவரான ஒட்டக் கூத்தர், தான் பாடிய “தக்க யாகப் பரணி” என்ற நூலில்,

“தாரக வண்டந் தொடுத்தணித்தார் தம்கிடம்
போதத் தமனியத்தாற்
சீராச ராசீச்சரஞ் சமைந்த தெய்வப் பெருமாளை
வாழ்த்தினவே
நீடிய வெண்டிசை நிழல் வாய்ப்ப
நேரிய தெக்கிண மேருவென்னப்
பீடிகை தில்லை வனத்தமைத்த பெரிய
பெருமாளை வாழ்த்தினவே.”

எனத் தெக்கிணமேரு எனப்படும் தஞ்சை இரசராஜீஸ்வரமுடையார் கோயிலை இராசராசன் பொற்கோயிலாக நிர்மாணித் தானோ அவ்வாறே அவனுக்குப் பின் சோழப் பேரரசை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் தில்லைச் சிதம்பரம் நடராசர் கோயிலைப் பொற்கோயிலாக நிர்மாணித்தான் எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

*9* ஆம் திருமுறை ஆசிரியர்களிலொருவரும் சித்துக்கள் நிகழ்த்தும் ஆற்றல் கைவரப் பெற்றவருமான கருவூர்த்தேவர் முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்தவொரு சித்தருமாவார். இராசராசன் நிர்மாணித்த தஞ்சைப் பெருங்கோயிலின் கருவறையில் மூலவரான “பெருவுடையார்” அல்லது “பிரகதீஸ்வரர்” என்ற அந்தப் பெருத்த சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்யும் பொழுது தேவையான அளவு மருந்து சாத்தியும் ஆவுடையாரில் இறுகப் பொருந்தாதிருந்த அச்சிவலிங்கத்தை நேராக நிறுத்தி அசையாது பொருத்திய பெருஞ்சித்தராகவும் போற்றப் படுகின்றார். தில்லை, தஞ்சை இராசராசேச்சரம் கோயில்களுட்படப் பத்துத் தலங்களுக்குத் திருவிசைப்பாக்கள் பாடியுள்ள இவ்வருளாளர்,

பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பல ரேம்பலித்திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையையென்று நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயிலனையார்
விலங்கல் செய் நாடக சாலை
இன்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே.

எனத் தஞ்சைக் கோயிலில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் பிரகதீஸ்வரரின் பேரருட்திறனைப் போற்றித் தஞ்சைப் பெருங்கோயிலுக்கும் திருவிசைப்பா *11* பாடல்கள் பாடியுள்ளார்.

நாயன்மார்களைப் போன்று தலயாத்திரை செய்து அத்தலங்கள் மீது பலநூறு சந்தப் பாக்களால் முருகன் புகழ்பாடி இயலிசைத் தமிழை அலங்கரித்த அருணகிரிநாதர் தஞ்சைக் கோயிலின் இரண்டாம் கோபுரமான இராசராசன் கோபுரத்தில் மிக அழகுற வீற்றிருக்கும் முருகப் பெருமானை

“...... வாசவன் மேவி வாழ்பதிக்குயர்ந்த தஞ்சை
மாநாகர் ராஜ கோபுரத்தமர்ந்த பெருமாளே.”

என அப்பெருமானின் புகழைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பேரரசன் இராசராசனின் பெரும் வெற்றிச் சின்னமாக விளங்கும் தஞ்சைப் பெருங்கோயில் பெருஞ் செல்வம் நிரம்பிய கோயிலாக அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. வரலாற்றுச் சிறப்புடைய அக்கோயிலுக்குப் போர் வெற்றிகள் மூலம்

சேர்ந்த பெருஞ்செல்வம் இராசராசன், அவனது பட்டத்தரசிகள், பொதுமக்கள் கொடுத்த நன்கொடைகள் வரி அறவீடுகள், பிற வருமானங்கள் எனப் பல துறைகளிலிருந்தும் வந்து சேர்ந்த திரண்ட செல்வம் அனைத்தும் வழங்கப்பட்டன. பணம் நிரம்பிய கோயில் களஞ்சியம் வங்கி போன்று கடன் கொடுக்கல் வாங்கல் நிதிச் செயற்பாடுகளை மேற்கொண்டு விவசாய, கைத்தொழில் உற்பத்திகளைப் பெருக்கும் நோக்குடன் பொதுமக்களின் நிதித் தேவைகளுக்கெனவும் பேரரசிற்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கும் வேறு நிறுவனங்களுக்கும் வழங்கி ஒழுங்க மைக்கப்பட்ட நிதிவளம் மிக்க பெரும் நிதி நிறுவனமாகவும் மிக முனைப்புடன் செயற்பட்டு மக்களின் பொருளாதார வாழ்வின் நடு நாயகமாக முதன்மை பெற்று விளங்கியது. மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்கி அவர்களை அவ்வழியில் ஆற்றுப்படுத்துகின்ற தஞ்சைப் பெருங்கோயில் போன்ற பெருங்கோயில்கள் வழிபாட்டிடமாக மட்டுமன்றி மக்களின் பொருளாதார சமூக வாழ்வின் உயர்வுக்கும் செழிப்புக்கும் ஊன்றுகோலாக விளங்கி மிக வலுவுள்ள சமய சமூக நிறுவனங்களாகவே இயங்கின. இவ்விடயம் தொடர்பாக

"....மத்தியகால இந்து சமயம் தென்னிந்தியாவிற்கு வழங்கிய இருகொடைகள் கோயிலும் மடமும் ஆகும், சோழரின் ஆட்சிக்காலப் பகுதியிலேயே இவ்விரு நிறுவனங்களும் மெல்ல மெல்ல வளர்ந்து சூழ்நிலைக்கேற்ப மாற்றம் அடைந்துள்ளன. இன்றுவரை அந்த உயர்நிலையை அவை பெற்று வந்துள்ளன. விசயாலயன் மரபுச் சோழர் ஆட்சியில் தென்னிந்தியாவில் சைவ சமயத்தின் பொற்காலம் தொடங்குகின்றது எனக் கூறலாம்......" "கோயில் வங்கியாகவும், பள்ளிக்கூடங்களாகவும், பொருட்காட்சிச் சாலைகளாகவும், வைத்திய சாலைகளாகவும், நாடக மன்றங்களாகவும் விளங்கியது. சுருங்கக் கூறின் அக்காலத்து நாகரிக வாழ்க்கையிலும் கலைகளிலும் சிறந்தவை எல்லாம் தன்னையே சுற்றி இயங்கப் பெற்றது மட்டுமன்றி அவற்றையெல்லாம் தர்ம உணர்விலிருந்து உதித்த மனிதாபிமானத்தால் செம்மைப் படுத்தியதில் மத்தியகால இந்துக் கோயில்களுக்கு நிகரான நிறுவனங்கள் உலக வரலாற்றிலேயே அருமையாகத்தான் உள்ளன." என்றவாறு - Cholas - என்ற நூலில் கூறும் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியின் கூற்று கோயில்கள் அக்காலத்தில், மிகச் சிறப்பாகச் சோழராட்சிக் காலத்தில் மக்களின் சமய, ஆன்மிக வாழ்க்கையில் மட்டுமன்றி நாட்டின் பொருளாதார சமூக, வாழ்விலும் அவை பெற்றிருந்த மிக நெருக்கமான பங்களிப்பின் கனதியினைத் தெளிவாக்குகின்றது.

கல்வெட்டுக்களில் "இராஜராஜீச்சரம்" என்றே குறிப்பிடப்பட்டுள்ள இராசராசனின் மகோன்னதப் படைப்பான தஞ்சைப் பெருவுடையார் கோயில் அவனது ஆட்சியின் *25ஆவது ஆண்டு 275 ஆவது நாளில் கி.பி.1010* இல் கும்பாபிஷேகம் நிகழ்த்தப் பெற்று வழிபாட்டுக்கான கோயிலாகப் பூசை, வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்ட தகவல் கோயிற் சுவரில் பொறிக்கப்பட குறிப்பொன்றில் காணப்படுகின்றது.

சைவ சமயம் பாரத நாட்டுக்கு வழங்கிய அருங்கொடைகளில் கட்டட, சிற்ப, ஓவிய, நுண்கலைகள் - fine arts - பொதிந்து திகழும் கருங்கற் கோயில்களும் ஒன்று. அக்கோயில்களிலும் திராவிடக் கட்டடக் கலையின் - Dravidian Architecture - உன்னதத்தினை உலகிற்கு உயர்த்திக் காட்டும் ஒப்பற்ற கலைப்படைப்பாக போற்றப்படும் தஞ்சைப் பெருங்கோயில் முதன்மையானது. இந்தியாவிலேயே மிகப் பெரியதான இக்கோயிலின் பரந்த வெளிச் சுற்றினுள் கட்டப்பட்ட திருச்சுற்று மாளிகையில் கணபதி, முருகன், பார்வதி, வராகி அம்மன், சண்டேஸ்வரர், கருவூர்த்தேவர் என *36* பரிவாரக் கோயில்களும் இன்னும் பல தெய்வ விக்கிரகங்கள், சிவலிங்கங்களின் வரிசைகள் எனப் பல கோயில் அமைப்புகள் இருந்தாலும் தன்னைச் சூழவுள்ள கட்டட அமைப்புகள் அனைத்தையும் மறைத்துக்கொண்டு தான் மட்டும் விண்ணோடு மோதுவது போன்று ஓங்கி

உயர்ந்து மிக நீண்ட நெடுந்தூரத்திற்குக் காட்சியளிக்கும் இக்கோயில் விமானத்தின் அதியலங்காரமான தோற்றத்தின் பேரெழிலை வார்த்தைகளில் வடிக்க முடியாதென இவ் விமானத்தின் நேர்த்தியான அமைப்பையும் அழகையும் கூர்ந்து நோக்கிய கலை வல்லுனர்கள் வியப்புறுகின்றனர். இவ்விதம் பிரமாண்டமான கட்டட நிர்மாணம், கல், செம்பு, ஆகியவற்றில் வடிக்கும் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், ஓவியம், ஆடல்பாடற் கலைகள் கல்வெட்டுக்கள் பொறிக்கும் கலை என எல்லாக் கலைகளின் கருவூலமாக ஒட்டுமொத்தமாகத் தமிழக வரலாறு, கலை, பண்பாடு ஆகிய அனைத்தும் பொதிந்து திகழும் பெட்டகமான இக்கோயில் ஒப்பற்றதொரு கலைக்கூடமாகவும் இந்திய வரலாற்றில் சிறப்புப் பெற்றுள்ளது. இந்தியத் தொல்பொருளாய்வு இலாகாவினால் பேணப்பட்டு வரும் இக்கோயிலைச் சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனமும் – UNESCO – உலகப் பண்பாட்டுச்சின்னமாக – WORLD HERITAGE MONUMENT – அங்கீகரித்துள்ளது. “கல்லும் சொல்லாதோ கவி” எனக் கூறக் கேட்டிருப்போம். இறைபக்தி, வெற்றிப் பெருமிதம், அழகு, நுட்பம், ஆற்றல், அயரா உழைப்பு அனைத்தினதும் திரண்ட வடிவமான தஞ்சைப்பெருங்கோயிலை பேரரசன் இராசராசன் நிலைநிறுத்தியதன் மூலம் கருங்கல்லில் கவிதையையல்ல ஊழியுள்ள காலம் வரை நீடித்து நின்று நிலைக்கும் அரும்பெருங் காவியத்தையே படைத்துள்ளான்.

என்றுமுள்ள இறைவனுக்கு, என்றும் விளங்கும் கோயிலாக கருங்கற்களே இல்லாத தஞ்சாவூரில் சுமார் ஆயிரம் - *1000* - ஆண்டுகளுக்கு முன் கருங்கற்களுள்ள தூர இடங்களிலிருந்து கருங்கற்களை வெட்டிக் கொணர்ந்து உலகம் வியக்கும் ஒப்பற்றதொரு கலைக்கோயிலாக நிர்மாணித்த சோழப் பெருவேந்தன் இராசராசனின் அரும் பெருஞ் சாதனை அவனின் மாண்பு மிக்க புகழை என்றும் நிலைத்திருக்க வைத்திருக்கும்.

மகோன்னதமான இப்பெரும் படைப்பின் அருமை பெருமைகளை எடுத்துக்கூற வேண்டுமாயின் நிபுணத்துவம் மிக்க கட்டடக் கலைஞனுடைய நுட்பமான நிர்மாண அறிவும், பெருங் கவிஞன் ஒருவனுடைய உணர்ச்சி மிகுந்த கற்பனை வளமும் தலை சிறந்த எழுத்தாளனின் வீச்சு மிக்க எழுத்தாற்றலும், ஒரு சேரக் கைவரப்பெற்ற ஆற்றல் மிக்க ஒருவனால் தான் விவரிக்க முடியுமென இக்கட்டட நிர்மாணத்தின் பேரெழிலுக்கு - Majestic appearance - புகழ்மாலை சூட்டுவர்.



# பாம்பன் சுவாமிகள்

## திருமதி அமிர்தா தியாகலிங்கம்



சென்ற இதழின் தொடர்ச்சி

**அலோபதி (ஆங்கில) மருத்துவ மாணவருக்கு அறிவுரை கூறுதல்:**

மருத்துவமாணவன், "உடம்பும் உயிரும் ஒன்றே, ஆன்மா என்றொன்றில்லை" என்றான். சுவாமிகள் அவனை நோக்கி, "அதிகம் உதிரமுள்ளவன் மிகவிவேகியாகவும், மெல்லிய தோற்றமுடையவன் புத்தி குறைந்தவனாகவும் இருக்கிறார்களா? மயக்கமருந்து கொடுத்து ஒருவரை உணர்ச்சியிழக்க செய்து சத்திரசிகிச்சை செய்யும்போது இரத்தம் பீறுடுகிறதே! உதிரம் ஆன்மா இல்லை. உதிரத்தைப் பிராணவாயுவும், பிராணவாயுவை ஆன்ம உணர்வும் பற்றி இருக்கின்றன. மயக்கமருந்து உணர்வையும், வாயுவையும் அடக்கி விட்டது. நுட்பமாக உள்ளதுதான் ஆன்மா" என அந்த மருத்துவ மாணவருக்கு விளக்கி அறிவுறச் செய்தார்.

**மஹா தேஜோ மண்டல சபை:**

எத்தேசத்தவராயினும், எக்குலத்தவராயினும், முருகனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபாடு செய்பவர்கள் "மஹாதேஜா மண்டலத்தார்" என்றும், அவர்களுக்காக சுவாமிகள் இச்சபையை நிறுவினார் என்றும் மஹாதேஜா மண்டலத்தைப் பற்றித் தன் பாடல்களில், குறிப்பாக திருப்பாவில் இடம்பெற்ற திட்பத்திலும், செக்கர்வேள் செம்மாப்பிலும் கூறியுள்ளார்.

சுவாமிகள் செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர்வேளிறுமாப்பு என்ற இரு செய்யுள்களாலான நூல்களைப் படைத்துள்ளார். எழுவாயுரையில் சுவாமிகள் சொன்னது:

"இதனுள் முழுமுதலிலக்கண அதிகாரமும், செக்கர் வேளிறுமாப்பினுள் வீடுபேற்றதிகாரமும் எமது முடிவான சித்தாந்தமாகும். ஆயிரத்து நூற்று ஒரு திருப் பாட்டுக்களால் நிரம்பியுள்ள திருப்பா என்னும் எமது நூலினுள் நாற்பத்து மூன்று திருப்பாட்டுகளுக்கு மேற்கோள்களோடு வேதத் தமிழால் உரையாக வரையப்பட்ட திட்பத்திலே இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம் எனவும் தீட்டப்பட்டமையின் அந்நூலுட் பரந்து கிடக்கும் பொருளும் இச் சித்தாந்தமேயாம். இன்னும் எம்முடைய பத்திய கத்திய ரூபமாயுள்ள பன்னூல்களின் முடிபும் இதன் கண்ணேயேயடங்கும்" என்று சுவாமிகள் கூறியிருத்தலின் இந்நூல்களின் நுட்ப திட்ப நிபுணத்துவம் உணர்வார் உணர்ந்து கொள்க.

**கால்முறிவும், மருத்துவமனையில் முருகனின் காட்சிகளும்:**

ஆங்கில மார்கழி மாதம் 27ம் திகதி 1923ம் ஆண்டு தம்புச்செட்டி வழியே சுவாமிகள் போய்கொண்டிருக்கையில் குதிரைவண்டி மோதி தெருவில் வீழ்த்தி, வண்டியின் சக்கரமும் இடது கணைக்கால் மீது ஏறியதால், சுவாமிகளின் கால் முறிந்து விட்டது. அங்கு நின்ற அன்பர்கள் சுவாமிகளைச் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்த்தார்கள். சீடர்கள், அடியவர்கள் கவலையுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள். குறிப்பாக சின்னசாமி சோதிடரும் மனைவியும் வீட்டில்

இருந்தபடி முருகனை நினைத்துச் சுவாமிகளின் சண்முககவசத்தை தினந்தோறும் பலமுறை பக்தியாகப் படித்தார்கள். மற்றச் சீடர்களும், அடியார்களும் சண்முககவசத்தை தினமும் ஓதினார்கள்.

"ஏரகத் தேவன் என்தாள் இரு முழங்காலும் காக்க!
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க!"

என்று சின்னச்சாமி அவர்கள் பாடும்போது வேல்களால் சுவாமிகளின் முறிவு பொருத்தப்படுவதை மனக்கண்ணில் கண்டு இன்புற்றார். சுவாமிகளின் கால் குணமாகுமென திடமாக நம்பினார்.

சுவாமிகளின் வயதும், பலகாலமாக உப்பு முதலான பொருள்களைத் தவிர்த்துத் தனியே அன்னமும் பச்சைப்பயறும் அவருடைய ஆகாரமாக இருந்ததாலும் கால் பொருந்தாது என ஆங்கில மருத்துவர் சொல்லிவிட்டார். கால்முறிவு ஏற்பட்டு 11ஆம் நாள் இரவு, 06-01-1924 அமாவாசைத் திதி, பூராட நட்சத்திரம், ஞாயிறு நாள் சுவாமிகள் தன் நிலையை எண்ணி முருகனிடம் வருத்தமுடன் தெரிவித்துக் கலங்கியபோது இரண்டு மயில்கள் தோகையை விரித்து மகிழ்ச்சியாக ஆடியதைக் கண்ட சுவாமிகள், இன்புற்று முருகனின் கருணையை எண்ணித் துதித்தார். இது தான் பின் நாள்களில் சுவாமிகளால் "மயூரவாகன சேவனம்" என ஏற்பாடாகியது.

அடுத்த நாள் சுவாமிகளின் கட்டிலில் ஒரு அழகிய தெய்விகக் குழந்தை துயில்வதைக் கண்டு, சுவாமிகள் "முருகா" என அழைக்க, குழந்தை மறைந்துவிட்டது. சுவாமிகளும் பன்னிருமுறை முருகனை அழைத்து வணங்கினார். சிறிது நேரத்தில் எலும்புகளும் பொருந்திக் கொண்டன. வைத்தியசாலையில் 15 நாள்கள் தங்கும் படியும், பூரண சுகம் கிடைக்கும் என்றும் அசரீரி வந்தது. ஆங்கில வைத்தியர்களுக்கோ ஆச்சரியம்; அதிசயம். சுவாமிகளின் இறை பக்தியை எண்ணிப் புகழ்ந்து அவரை வணங்கி மகிழ்ந்தார்கள்.

சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனை மன்றோ வாட்டு இலக்கம் 11இல் இருந்த சுவாமிகளுக்கு, வைத்தியர்களின் எண்ணத்திற்கு மாறாக, கால் குணமானது, இங்குள்ள உட்புற சுவரில் 5 வைத்தியர்களின் பெயருடன் கல்வெட்டாக பதிக்கப்பட்டு, அருகில் சுவாமியின் படமும் வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மனையை விட்டு வெளியேறிய சுவாமிகள் குழந்தைவேல் முதலியாருடைய வீட்டில் புதுப்பாக்கத்தில் தங்கினார். பல அடியார்கள் சுவாமிகளை உடன் இருந்து கவனித்தார்கள். இரண்டு மாதங்களின் பின் ஜகநாதமுதலியாரும், அவருடைய தர்ம பத்தினியும், மிக அதிகமான வெய்யிலும், வெப்பமும் காரணமாகச் சுவாமிகளைத் தங்கள் வீட்டுக்குக் கூட்டிச் சென்று மேல் தளத்தில் இருத்திச் சேவை புரிந்தனர். சில நாள்களின் பின் சுவாமிகளும் நடக்கலானார்.

**குமாரசுவாமியம், மற்றநூல்களும்:**

துர்மதி ஆடிமாதம் 1192 செய்யுள்கள் உடைய குமாரசுவாமியம் என்னும் நூலை இயற்றி ஐந்து காண்டங்களாக உருவாக்கிக் கொடுத்தார். இது பல சிறப்புக்களைக் கொண்டது. ஆழ்ந்த புலமையும், ஆராயும் திறனும் கொண்டவர்களாலும் கூட ஊன்றிக் கவனித்தால் அன்றி, இலகுவாக அறிய முடியாததாக இருந்தது. 1921இல் ஆரம்பித்து 1923 இல் முடிக்கப் பெற்ற இந்நூல் 1925இல் அச்சிடப்பட்டது. ஆறுதலைத் தருபவனும், ஆறுதலை உடையவனும், ஆறுபடை வீடுகளுக்கு அதிபதியானவனுமான ஆறுமுகப் பெருமான் மீது கொண்ட அளவிலா பக்தியால் 6666 பாடல்கள் பாடிக்கொடுத்தார். பின் இவற்றை எல்லாம் ஆறு மண்டலங்களாக தொகுத்து அளித்தார்.

சுவாமிகள் அமைதியானவர். பற்றை முழுதாகத் துறந்தவர். தன்னை வணங்கும்படியோ, புகழவேண்டுமென்றோ கூறாதவர். சுவாமிகள் வேதவியாசம் என்ற 40 வினாவிடை கொண்டதும், சுப்பிரமணிய வியாசம் என்ற 97 வினாவிடை கொண்டதும் என

உரைநடைநூல்களையும், குருசீட சம்பவ வரலாற்று வியாசம் என்ற நூலையும் எழுதிக்கொண்டார். சுவாமிகள் மூன்று காலங்களிலும் தமது சீடர்களுக்கும், அடியவர்களுக்கும் கூறிய சீரிகருத்துக்கள் “செவியறிவுறூஉ”என்று ஒரு சிறு நூல் தொகுக்கப்பட்டது. பல உண்மைகளை விளக்கும் இந்நூல் படிப்பவர்களின் சந்தேகங்களை நீக்கி ஆன்மபலத்தில் வெற்றியுறச் செய்யும்.

**மஹாதேஜோமண்டல சபைக்கான சாசனம் எழுதல்:**

சுவாமிகள் 1926 யூன் மாதம் சென்னையில் இருந்து கோவை வழியே நீலகிரி சென்று உடல் பலவீனமானதை நினைத்து மீண்டும் சென்னை திரும்பினார்.

17-07-1927இல் 21 உறுப்பினர்களை நியமித்து மஹாதேஜோமண்டல சபையை நிறுவி ஆங்கிலத்தில் ஒரு சாசனம் எழுதிப் பதிவு செய்தார். நியமித்த அங்கத்தவர்களில் சிலர் சபைக்கு இயல்பாக நடக்காததைக் கண்ணுற்று குறித்த சாசனத்திற்கு ஒரு அநுபந்தம் தமிழில் எழுதி 21-11-1927 இல் பதிவு செய்தார்.

1928 மே மாதம் 29ம்திகதி சென்னையில் அதிகவெப்பம் காரணமாக சுவாமிகள் பெங்களூர் சென்று தங்கினார். இங்கும் சில அதிசயங்களையும் அநுபவங்களையும் பெற்ற சுவாமிகள் முருகனைத் துதித்தார். பின் 15-07-1928 இலே சென்னை வந்தார்.

**சுவாமிகள் முத்தியடைதல்:**

உடல் நலத்துடன் இருந்த சுவாமிகள் நண்பகல் மட்டும் சிறிதளவு கோதுமை நொய்க் கஞ்சியை உணவாகக் கொண்டார். விபவ ஆண்டில் கந்தசஷ்டி விரதம், மயூரவாகன சேவனம் விழா, சிவராத்திரி பூசை என்பனவற்றை மிகச் சிறப்பாகச் செய்தார். திருவலங்கல் திரட்டு, குமாரகுருதாச சுவாமிகள் பாடல் என்ற இரு நூல்களையும் திருத்தி இரண்டாம் பதிப்பைக் கொணரத் தொடங்கினார்.

சுக்கில வருடம் கோடையில் வெப்பத்தின் காரணமாகத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொழுதைக் கழிப்பார். வைகாசி மாதம் 2ஆம் நாள் சீடர் சின்னசாமிப்பிள்ளை ஜோதிடரைக் கூப்பிட்டுத் திருவான்மியூரில் கூடிய சீக்கிரம் ஒரு நிலத்தைப் பார்க்கும்படி ஏவினார். ஞானசாகரமுதலியார் சுவாமிகளை புதுப் பாக்கத்தில் தங்கும்படி வேண்ட நான் திருவான்மியூர் செல்கிறேன். நீ அங்கு வருக என்றார்.

வைகாசி 15ம் திகதி செவ்வாய்க் கிழமை திருவான்மியூரில் நிலம் வாங்கப்பட்டது. மகிழ்ச்சியுடன் அன்று இரவு துயில் கொள்ளாது இருந்த சுவாமிகள், முதலியார் இராஜா பாதரையும், மதுரை முதலியாரையும் அழைத்து என் தேகத்தைத் திருவான்மியூருக்கு கொண்டு செல்லுங்கள் என்று அறிவுறுத்தினார்.

மறுதினம் புதன்கிழமை காலை சுவாமிகள் நீராடி, தன் வழிபாட்டை முடித்து, சீவன் ஆண்டவனை சிறிது நேரத்தில் சேரும் என யோக நிஷ்டையால் அறிந்தார்.

சென்னை வெப்பத்தால் சுவாமிகளை பெங்களூர் கூட்டிச்செல்ல எண்ணினார்கள். சுவாமிகள் மிகக் களைப்பாக இருந்ததால் இதை தவிர்த்தார்கள். வைத்தியர்களாலும் சுவாமிகளின் நிலையை அறியமுடியவில்லை. மறுநாள் சுக்கில ஆண்டு வைகாசி வியாழக்கிழமை (30-05-1929) அபரபட்சம், சஷ்டி திதி, அவிட்ட நட்சத்திரம், காலை 7.15 மணிக்கு சுற்றியிருந்தவர்கள் பார்க்க, பிராணவாயுவை உள்ளிழுத்து உந்தியில் எழும்பி அடக்கி மகாசமாதியானார். இந்நிலை சுவாமிகளின் குக சாயுச்சிய நிலை ஆகும்.

மறுநாள் (31-05-1929) வெள்ளி காலை சுவாமி களின் பணத்தில் வாங்கிய நிலத்திலேயே சமாதி கொண்டார்கள். ஆண்டு தோறும் சுவாமிகளின் குருபூசை நடைபெறுகிறது. இன்றும் சீரும் சிறப்புமாக இச்சமாதிக் கோயில் இருக்கிறது.

# கலசம் தந்த சிந்தனை

## வித்துவான் க. ந. வேலன்

நான்போனால் நான்வருவேன் என்றெடுத்துக்
கலசத்தால் அழுதுவார்த்தீர்
தேன்போலும் தெள்ளுதமிழ்த் தேவாரப்
பக்தி மொழி பகர்ந்தீர்
நான்போகத் தானேஇவ் வுலகில்
நமைப் படைத்த நான்முகனும்
ஊன் படைத்தே அதற்குள்ளே உயிரும் ஊட்டி
உலவிடவே விட்டு வைத்தான்.

வானாளும் வள்ளுவனும் இவ்வுலகில்
வாசுகியை மணந்து காட்டித்
தேனாளும் திருக்குறளால் திசையளந்தான்
இறுதியில் தெய்வ மானான்
வானாடர் காணாத இன்பவாழ்வை
வாழ்வாங்கு வாழ்ந்துநீர் பெறுக என்றான்
ஆனாலும் என்ன பயன் ஆர் கேட்டார்
அவருரையை அந்தோ! அந்தோ!

கலசத்தால் வார்க்கின்றீர் அமுதபானம்
காசினியோர் கேட்கின்றார் காமகானம்
விலகித்தான் போகின்றார் மனிதரெல்லாம்
வியப்பதற்கோ ஏதுமில்லை விதியின் கோலம்
உலகத்தீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
ஒன்றேதான் பரம்பொருள் ஒன்றேதான் மனிதகுலம்
கலகத்தார் மானிடர்கள் காதால் கேட்பர்
கருத்தினிலே கொளமாட்டார் கடிதினிலே மறப்பார்!

குறிஞ்சி நிலம் இந்த நிலம் குடிப்பதற்கும்
கூடியாடி ஊடுதற்கும் ஏற்றநிலம்
அறிந்ததினால் ஆன்றோர் அன்று கூடலும்
கூடல் நிமித்தமுமே குறிஞ்சி யென்றார்
செறிந்திங்கு வாழுகின்ற செந்தமிழர் தாமும்
சேர்ந்தநன் வண்ணமாய்த் திரிந்து போனார்
அறிந்திட்டேன், என் செய்வேன் ஆச்சரியத்தால்
வாய் பிளந்திட்டேன் இல்லை, இல்லை!

- நன்றி
வருக, தமிழர் பொற்காலம் **1994**

# கிராமிய வழிபாடு

செ.கிருபிகா
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி

சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கு முறையாகும் என்று கூறுவதில் தவறில்லை. இதனை அடிப்படையாகக் கொண்ட மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் சமயங்கள் வாழ்வோடும் வேரூன்றியுள்ளன. மனித சமுதாயத்தின் எண்ணங்களே சமய நம்பிக்கைகளுக்கு அடித்தளமாகவும் உள்ளன. சமகாலப் பண்பாடுகளில் நிலவும் அனைத்து வகையான சமய நம்பிக்கைகளும் “சமயம்” என்னும் தலைப்பின் கீழ் வைத்தே பேசப்படுகின்றன. சமயத்தோடு பண்பாடும் தொடர்புடைய ஒன்றெனக் கொள்ளப் படுகின்றது. எனினும் வழிபாடு சமயத்தினதும் பண்பாட்டினதும் அங்கம் என்று கூறலாம்.

விதிமுறைக்கு உட்பட்ட வழிபாட்டை நிறுவன சமயம் எனக்கூறலாம். இந்நெறிக்குட்பட்ட தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் எனக் குறிப்பிடப்படும். இப்பெருந்தெய்வ வழிபாடு ஆகமம் சார்ந்த வழிபாடு எனக்கொள்ளப்படும். விதிமுறைக்கு உட்படாத வழிபாட்டை நாட்டுப்புறச்சமயம் எனக்கூறலாம். இது சிறு தெய்வ வழிபாடு எனக் கொள்ளப்படும். நாட்டுப்புறத் தெய்வங்களை, கிராமியத்தெய்வம், குலதெய்வம், காவல் தெய்வம் எனப் பல வகையாகக் குறிப்பிடலாம்.

ஈழநாட்டின் கிராமிய வழிபாடு புராணக்கதைகள், மரபுக்கதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றதை அறியலாம். கிராமியத் தெய்வங்கள் வழிபடப்பட்டு வருகின்றன. கிராமியத் தெய்வங்கள் அனைத்தும் சைவத்தமிழ் மக்களின் கண்கண்ட தெய்வங்கள் ஆகும். இத்தெய்வங்களுக்குப் பூசை நிகழ்த்துவோர் “பூசாரிகள்” எனப்படுவர். பூசாரி கிராமத்தில் நன்மதிப்பைப் பெற்றவராக இருப்பார். அத்துடன் அவர் பரம்பரை பரம்பரையாக வருபவராகவும் காணப்படுவார்.

மனிதன் பிறந்தது முதல் அவனுடைய இறப்பு வரை பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஒரே இனம், சாதி, குலம் சார்ந்த மக்கள் ஒரே வகையான சடங்குகளைச் செய்வார்கள். சடங்குகள் இனக்குழுக்களை வேறுபடுத்தவும் உதவுகின்றன. இச்சடங்குகள் பற்றி பழந்தமிழர் நூல்கள் விரிவாக விளக்கி நிற்கின்றன. வாழ்க்கையுடன் இணைந்த சடங்குகளாக பிறப்புச்சம்பந்தமான சடங்குகள், சமயச்சடங்குகள், திருமணச்சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள், ஈமச்சடங்குகள் எனப்பல சடங்குகளைக் குறிப்பிடலாம்.

இச் சடங்குகளில் சமயச்சடங்குகளைப் பற்றி நோக்கும்போது அவை யாவும் மக்களை இணக்கமுறச்செய்வதுடன், ஒன்றுபடவும் வைக்கின்றன. இதன் மூலம் அனைவரிடமும் ஒன்றுபட்ட நடத்தைமுறை ஏற்படுகின்றது. சமுதாயக் கூட்டமைப்பை ஏற்படுத்துகின்றது. சமயச் சடங்குகள் மூலம் கிராமிய வழிபாட்டு முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிராமிய வழிபாட்டில் சடங்குகளே முக்கிய இடத்தை வகிக்கின்றன. குறிக்கப்பட்ட பிரதேசத்திற்கு ஏற்பவும், குறிக்கப்பட்ட தெய்வத்திற்கு ஏற்பவும் இச்சடங்குகள் அமைந்திருக்கும். இச் சடங்கானது மரபு வழி வந்தது. ஒழுங்கைக் கடைப்பிடிப்பது. பயம், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நேர்த்தி வைத்தல், குளிர்த்தி செய்தல் போன்றவை வழிபாட்டின் பகுதிகளாகும்.

இலங்கையில் வழிபடப்பெறும் நாட்டுப்புறத் தெய்வங்கள் தமக்கெனச் சில பொதுத்தன்மை களைக் கொண்டுள்ளன. பிறப்பு, இறப்பு உள்ளவை. குடும்பம், சாதி போன்றவற்றுக் குரியவை. நித்திய வழிபாடு அற்றவை, நியமங்கள் உடையவை. வரையறுத்த ஆற்றலைக் கொண்டவை. பெரிதும் உயிர்ப்பலி ஏற்பவை. பகைமையை அழிக்கும் தன்மை

கொண்டவை. பத்ததி முறைகளில் கடைப்பிடிக்கப்படுபவை என்பவை போன்ற பொதுத் தன்மைகளைக் கூறலாம்.

கிராமியத்தெய்வங்கள் நுழைவாயில் போன்ற இடங்களில் காணப்படும். அதேவேளை பந்தல் அமைப்புடன் கூடிய இடங்களிலும் குடி கொண்டிருக்கும். இத் தெய்வங்கள் பகைமையை அழித்து ஒற்றுமையைப் பேணுபவையாகக் காணப்படுவதை மறந்துவிட இயலாது. ஆதலால்தான் இத் தெய்வங்கள் குடும்பத்தாருக்கோ, குறிப்பிட்ட சாதியினருக்கோ உரிய தெய்வங்களாக உரிமை கொண்டாடப் படுகின்றன. இவற்றிற்குப் பிராமணர் அல்லாதவர் பூசை செய்கின்றனர். பெரும்பாலும் இவர்கள் ஒரு பரம்பரையில் வந்தவர்களாகவே காணப்படுவர். இத்தெய்வங்கள் கட்டுச் சொல்லுதல், குறி சொல்லுதல் போன்றவற்றால் முதன்மையடைகின்றன.

இலங்கையில் கிராமிய வழிபாடு காணப்படும் பிரதேசங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பிர தேசங்கள், கிழக்கிலங்கைப் பிரதேசங்கள், வன்னிப்பிரதேசங்கள், மலையகப் பிரதேசங்கள், ஏனைய பிரதேசங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பிரதேசங்கள் பெரிய பரப்பளவைக் கொண்டவை. இப்பிரதேசங்கள் பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட பிரதேசங்களாகும். இப்பிரதேச மக்கள் கிராமிய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைத் தம் வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டவர்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் கிராமங்களாக சித்தன்கேணி, நெடுந்தீவு, மல்லாகம், ஏழாலை, சுழிபுரம், புத்தூர், மட்டுவில், பொலிகண்டி, கச்சாய், வரணி, மிருசுவில், பளை, போன்ற பல இடங்களைக் கூறலாம். இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. பெரும்பாலும் நவீன வசதிகள் அற்றவை. இக்காரணங்களால் இக்கிராமிய மக்கள் ஆகம வழிபாட்டிற்குப் புறம்பான வழிபாட்டு முறையில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறலாம்.

வன்னிப்பிரதேசங்கள் எனும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் அநுராதபுர மாவட்டத்திற்கும் இடையே அமைந்த இலங்கையின் வடபகுதியே வன்னி நாடாகும். இவ்வன்னியர்கள் அக்கினி கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். இப்பிரதேசங்களில் முள்ளியவளை, வற்றாப்பளை, பனங்காமம், மாங்குளம், புளியங்குளம் போன்ற பல இடங்களில் தெய்வங்கள் வழிபடப்பட்டு வருகின்றன.

கிழக்கிலங்கைப் பிரதேசங்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியவையாகும். இம் மாவட்ட மக்கள் இவ்வழிபாட்டில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள். இம்மாவட்டங்களில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் கிராமியத் தெய்வங்களையே பெரிதும் வழிபடுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பல கிராமப் பிரதேசங்கள் உள்ளன. சல்லி, கொக்கிளாய், நாயாறு, உப்புவெளி, பன்குளம், குச்சவெளி, சீனன்குடா, பெரியகுளம், போன்ற பல இடங்களில் சிறப்பாகக் கிராமிய வழிபாட்டுத்தலங்கள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமம், வாழைச்சேனை, களுதாவளை , வெல்லாவெளி, ஏறாவூர் போன்ற பல இடங்களில் கிராமியத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் பட்டிருப்பு, கல்முனை போன்ற இடங்களில் கிராமியத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. இவ்வாறு மாவட்டங்களிலும் கிராமிய வழிபாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றதை அறிந்து கொள்ளலாம்.


மலையகப் பிரதேசங்களிலும் இவ்வழிபாடானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசமரத் தடியில் காளியம்மன், வால்ராஜா கம்பிமுனி, மாடசாமி எனப்பல தெய்வங்களோடு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கருகில் "ரோதைமுனி கோயில்" எனும் ஒரு கோயில் அமைந் திருப்பதையும் மலையகத்தின் பல பகுதிகளிலும் காணலாம். இவ்வாறான தெய்வங்களைக் குல தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். ஏனைய பிரதேசங்கள் என்ற வகையில் சில

மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் உள்ளடக்கப்படுகின்றன. குறிப்பாக உடப்பு, சிலாபம், மாதம்பை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பகுதிகளில் சைவத் தமிழ் மக்கள் வாழ்வதால் தான் கிராமிய வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமிய வழிபாட்டில் காணப்படும் பொதுப் பண்புகளாக மடைப்பண்டம் எடுத்தல், மடை பரவுதல், தூளி பிடித்தல், பரிகலம் அழைத்தல், வழிவேட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கிராமிய வழிபாட்டில் காணப்படும் சிறப்புப் பண்புகளாக கலை ஆடுதல், கட்டுச் சொல்லுதல், நூல் முடிதல், பேய்க்குப் பார்த்தல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், தீப்பள்ளம் ஏறுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கிராமிய வழிபாட்டோடு இணைந்து கொண்டவை கலைகள். இக்கலைகள் அனைத்தும் நேர்த்தியை மையமாகக்கொண்டு வழிபாட்டின் போது நிறைவேற்றப்படும். கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், கொம்பு முறித்தல், மோகினி யாட்டம், நாட்டுக்கூத்து என்பன அக்கலைகளில் சிலவாகும். இக்கலைகள் கிராமிய மக்களின் வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் வளர்க்கப்பட்டன. மழை வேண்டியும் கொடிய நோய்களைப் போக்கவும் கலைகள் பயன்பட்டன.

கிராமியக் கோயில்களில் கூத்துக்களும் ஆடப்படுகின்றதை அறியலாம். காத்தவராயன் கூத்து, வள்ளியம்மன் கூத்து, கோவலன் கூத்து என்பன தற்போது காத்தவராயன் ஆலயம், கண்ணகை அம்மன் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களில் ஆடப்படுகின்றன.



ஈழத்தின் கிராமிய வழிபாட்டில் ஆண் தெய்வங்களே அதிகமாக வழிபடப் படுகின்றன. அவ்வாறு வழிபடப்பட்டு வரும் ஆண் தெய்வங்களாக ஐயனார், காத்தவராயன், பெரியதம்பிரான், வீரபத்திரர், முனியப்பர், கறுப்புசாமி, மாடசாமி, சுடலைமாடன், மதுரை வீரன், விறுமர், பூதராயர் போன்ற பல தெய்வங்களைக் குறிப்பிடலாம்.

இவ் வழிபாட்டில் ஆண் தெய்வங்கள் அதிகமாக வழிபடப்பட்டு வருகின்ற அதேவேளை பெண் தெய்வங்களும் வழிபடப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு வழிபடப்பட்டு வரும் பெண் தெய்வங்களாக முத்துமாரி, கொத்தி, சீதை, கண்ணகி, காளி, நாச்சியார், திரௌபதி, பிடாரி அம்மன் போன்ற தெய்வங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் நிலைத்திருக்கின்ற பாரம்பரிய வழிபாட்டு முறைகளாக பூசாரிமார் வழிபாட்டுமுறை, கட்டாடிமார் வழிபாட்டுமுறை, கப்புகனார் வழிபாட்டுமுறை, ஆதிக்குடிகள் வழிபாட்டுமுறை, சுய வழிபாட்டுமுறை, வேறு வழிபாட்டுமுறை என வழிபாட்டுமுறைகளைக் கூறிக்கொள்ளலாம்.

கிராமிய வழிபாட்டின் இன்றைய நிலையை நோக்கும் போது இவ்வழிபாட்டு முறையினை பின்பற்றுபவர்கள் குறைவென்றுதான் கூறவேண்டும். அதற்கான காரணங்களாக நவீன வசதிகள், கல்வியறிவு, இளைஞர்களிடையே சமய நம்பிக்கையின்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் இக்கிராமிய வழிபாடு இன்னமும் நிலைத்து நிற்கக் கூடியளவிற்கு காணப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அக்காரணங்களாக கலை மரபு பேணப்படுதல், பயம், நம்பிக்கை, ஒன்றுகூடல், சமரச மனப்பான்மை போன்றவற்றைக் கூறலாம்.

ஈழத்துச் சைவத் தமிழ்மக்கள் வாழ்க்கை யிலிருந்து வேறுபடுத்தப்பட முடியாத அளவிற்கு இக்கிராமிய வழிபாடு இணைக்கப்பட்டுள்ளது. கிராமிய வழிபாடு சைவத்தமிழ் மக்கள் வாழ்வில் நிலைத்து விட்ட வழிபாடென்றே கூறிக்கொள்ளலாம். மேலும் இவ்வழிபாடு சைவ மக்கள் மத்தியில் எக்காலத்திலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை.

# திருக்குறள் கதைகள்



திருமதி சாவித்திரி ஆனந்தன்

## அருளுடைமை

**அதிகாரம்: *25*** **குறள்: *241***

**அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள**

பொருள்களாகிய செல்வங்கள் கீழ் மக்களிடத்தும் காணப்படும்; ஆனால் (உயர்ந்தவர்களிடம் மட்டுமே உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வம் ஆகும்.

'Compassion is a wealth of grace,material wealth even the basest can gain'

தமிழ் நாட்டிலுள்ள திருப்பதி ஏழுமலையான் கோயிலைப்பற்றி அறியாதவர்கள் யாருமில்லை. கோடிக்கணக்கில் பெருமாளைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு, விதம் விதமான சிற்றுண்டிகள் தயாரிக்கப்பட்டு அன்றாடம் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், ஒரு மண்சட்டியில் வைக்கப்படுகின்ற தயிர்ச் சாதம் மட்டுந்தான் தினசரி ஏழுமலையானுக்கு நிவேதனமாகப் படையல் செய்யப்படுகிறது என்பதுதான். அந்தத் தயிர்ச்சாதம் தமக்கான பிரசாதமாகக் கிடைக்குமென்றால் அதுவே பெரிய பாக்கியம் என்று பக்தர்கள் கருதுகிறார்கள். இது பற்றிய ஒரு புராணக்கதை உண்டு.

முன்னர், பீமய்யா என்றொரு குயவன் இருந்தான். அவனுக்கு ஒரு கால் ஊனம். திருப்பதி ஏழுமலையான் அல்லது வெங்கடாசலாபதி எனப்படும் பெருமாள் மீது தீவிரமான பக்தி கொண்டவன். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம் இருந்து கடவுளர்துதி செய்வான். தினமும் ஏழுமலையானை மனதில் துதித்தபடி தனது தொழிலை நேர்மையாகச் செய்து வந்தான். ஒரு நாள், ஏழுமலையான் பீமய்யாவின் கனவில் தோன்றி, தன்னுடைய வடிவத்தைக் காட்டி மறைந்தார். மெய் சிலிர்த்துப் போன பீமய்யா. இறைவனுடைய வடிவத்தைக் களிமண்ணில் செய்து, தினமும் அதற்கு மலர் தூவி வழிபட்டு வந்தான். சில சமயங்களில், வனைதலில் ஈடுபட்டிருக்கும் போது இறைவனை நினைத்துத் தன்னை மறந்து கண்கள் மூடிய நிலையில், களி மண் துண்டுகளை மலர்களாகப் பாவித்துத் தூவி ஏழுமலையானை வணங்குவான்.

அதே காலப்பகுதியில், மன்னனாக இருந்த தொண்டமானுக்கு ஏழுமலையான் மீது பக்தியோடு பாசமும் அதிகம். வேங்கடவனுக்கு ஆலயம் அமைத்து, தினமும் பொன் மலர்களால் அர்ச்சனை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தான். ஒருநாள் பூஜையின்போது பொன் மலர்களோடு மண் மலர்களும் வந்து விழுந்தன. தனது வழிபாட்டில் ஏதும் தவறு இருக்குமோ என்றெண்ணி மன்னன் கவலையடைந்தான்.

குழப்பத்திலிருந்த மன்னனுக்கு அபூர்வக் கனவொன்று வந்தது. ஏழுமலையான் தோன்றி, தனது பக்தன் பீமய்யன் செய்யும் பூஜையைப் பார் அப்போது உண்மை புரியும் என்று கூறி மறைந்தார். குயவனுடைய இடத்திற்குச் சென்ற மன்னன், அங்கு மறைந்திருந்து பீமய்யா செய்யும் மண்

பூஜையைக் கண்டான். உடனே குயவனைக் கட்டித்தழுவி, “உன் உயர்வான பக்தியை அறிந்து கொண்டேன்” என்று அவனைப்போற்றினான். பீமய்யன் கனவிலும் அன்றைய தினம் தோன்றிய வெங்கடேசன், “உன் பக்தியின் பெருமையை என்று பிறர் கூற அறிகின்றாயோ அன்றே உனக்கு முத்தி அளித்து வைகுண்டத்துக்கு அழைத்துக் கொள்கிறேன்” எனக்கூறி மறைந்தார்.

பெருமாளின் ஆணைப்படி, அந்த பக்தனை கௌரவிக்கும் வகையில் இப்போதும் திருப்பதி ஏழுமலையானுக்கு மண்சட்டியில் நிவேதனம் செய்யப்படுகிறது.

Everybody will know about the Aezhumalaiyan temple of Thiruppathi in Tamil Nadu. Millions and Millions of devotees visit the temple to worship the God. Many kinds of eatables are made there and served for the devotees as ‘prasatham’.

It’s a surprise that only 'Thayir Satham' (yoghurt rice) in a clay pot is offered daily to God Aezhumalaiyan (Venkatajalapathy) as ‘Nivethanam’. Devotees prefer that yoghurt rice as a boon, if they could get it as their ‘prasatham’.

There is an epic about this.
Once, there lived potter named Bheemaiya. He was a strong devotee of the Thiruppathy Venkatesan. Bheemaiya was disabled, only having one leg. Every Saturday he observes fasting worshipping God wholeheartedly. Also, he did his job with devotion and honesty.

One day, Aezhumalaiyan appeared in Bheemaiya’s dream, showed his full appearance. The potter felt extremely happy and made a statue of the God in clay, and started worshipping that statute with flowers. Due to excess devotion, there were some instances, when during his job he unconsciously closes his eyes and considers clay pieces as flowers putting those under God’s feet when praying.

During the same period, the king of that time,Thondaman was also a devotee of Aezhumalaiyan and wanted to construct a temple for Venkatesan and do the ‘archanai’ with golden flowers. This, he accomplished and did pooja with golden flowers. One day, the king was astonished to see some clay pieces also were falling as flowers along with the golden flowers with which he was doing the archanai.

The King was upset to see this, thinking whether he had made any mistake in this worship. That night, God appeared in King’s dream and told, 'You go to my devotee Bhemaiyan’s place and watch what he does'. So, the King, went to the potter’s place to watch him doing the prayer but hidden from the view of the potter. It was then that the King realised about the true devotion of Bheemaiya. He came out of the hiding place, hugged Bheemaiya with emotion and said, ‘I am happy to know the value of your devotion’ and appreciated the potter’s actions.

On the same night, Aezhumalaiyan again appeared in Bheemaiya’s dream and told ‘When others identify and acknowledge your strong devotion and appreciate it, I will bless you and take you to Vaikundam’. On saying this, the God disappeared.

As an honour to Bheemaiya’s devotion, even today, the “Yoghurt rice” is offered as prasatham to Lord Venkatajalapathy. in a clay pot.

# விபூதி

**செல்வி வாரணி சுபாஸ்கரன்**
**(சாவகச்சேரி இந்துக்கல்லூரி)**



“நீறில்லா நெற்றிபாழ்” என்பது ஔவை வாக்கு. திருநீற்றின் பெருமை சொல்லவே உருவானது என்று கொள்ளலாம்.

திருஞான சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம்:

“மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே” - (தி 2 ப 66 பா 1)

இந்தத் தேவாரம் மந்திரச் சொற்களுக்கு நிகரானது. சைவ சமயத்தவரின் அடையாளமாக மட்டுமல்லாமல் தெய்விக ஆற்றல் தரும் புனிதச் சின்னமாக திருநீறு போற்றப்படுகிறது. பிறப்பெடுக்கும் எவரும் முடிவில் பிடி சாம்பலாகத்தான் வேண்டும் என்பதால் எதிலும் அளவுக்கு அதிகமான ஆசை வைக்காமல் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவது தான் திருநீறு. நீறு என்றால் சாம்பல். திருநீறு என்றால் மகிமை பொருந்திய சாம்பல் என்று பொருள். திருநீற்றை விபூதி என்று குறிப்பிடுவார்கள். விபூதி என்றால் ஞானம், ஐஸ்வர்யம் என்றெல்லாம் பொருள் தரும். பிறப்பு, இறப்பு எனும் கொடுமையான பிறவிச் சுழலிலிருந்து விடுவித்து ஈசனின் திருவடிகளில் எம்மைக் கொண்டு சேர்க்கும் மாமருந்து திருநீறு என்று போற்றுகிறது திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம்.

சைவசித்தாந்தம் கூறியபடி திருநீறு 4 வகைப்படும். அவை கல்பம், அநுகல்பம், உபகல்பம், அகல்பம் என்பன. கன்றுடன் கூடிய ஆரோக்கியமான பசுவின் சாணத்தைப் பிரம்ம மந்திரம் சொல்லிச் சிவாக்னியில் எரித்து உருவாக்குவது கல்பத்திருநீறு. காடுகளில் மேயும் பசுக்களின் சாணத்தைக் கொண்டு எரித்துச் செய்வது அநுகல்பத் திருநீறு. தொழுவங்களிலிலிருந்து எடுத்த சாணத்தைத் தீயில் இட்டு எரித்து எடுக்கப்படுவது உபகல்பத் திருநீறு. இதுவே நாம் பயன்படுத்தும் திருநீறு. தரையில் விழுந்து கிடைக்கும் சாணங்களை எடுத்துத் தயாரிக்கும் திருநீறு அகல்பம். சாம்பலாகி வரும் திருநீறு மும்மலங்களையும் சாம்பலாக்கும் என்கிறது தேவாரம். மனித உடலில் நெற்றி ஒரு முக்கிய ஸ்தானம். புருவ மத்தியை வசியப்படுத்திப் பலவகை சித்துக்களைச் செய்யமுடியும் என்பது ஞானியர் வாக்கு. நெற்றியின் மையத்தைக் காப்பதற்கே விபூதி அணியப்படுகிறது. ஆக்ஞா, விசுத்தி சக்கரங்களைப் பாதுகாத்து ஆன்ம ஒளியைப் பெருக்குவது விபூதி.

சூரிய கதிர்களின் சக்தியை நெற்றியின் ஊடாகக் கொண்டு செல்லவும் விபூதி பயன்படுகிறது என்றும் சொல்லப்படுகின்றது. விபூதி சிறந்த கிருமி நாசினி என்றும் அதனால் பல நோய்கள் வராமல் தடுக்க முடியும் என்றும் சொல்லப்படுகின்றது. விபூதியை ஜபம், மந்திரித்தல், யந்திரங்கள், மருத்துவம்..... எனப் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்திய விதத்தை அகத்திய மாமுனி அகத்தியர் பரிபூரணம் என்ற நூலில் விளக்கியிருக்கிறார். இந்நூலைப் படிப்பவர்கள் விபூதியை விடவே மாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம்.

திருநீற்றை அப்படியே அள்ளிப் பூசும் முறை உத்தூளனம். ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல் எனும் மூன்று விரலால் இடைவெளி விட்டுத் தரிப்பது திரிபுண்டரம். இடும் திருநீற்றை மோதிரவிரலால் எடுப்பது தான் சிறந்தது. நம் உடலில் பவித்திரமான பாகம் என்று அதுதான் கூறப்படுகிறது. வடக்கு அல்லது கிழக்குத் திசை நோக்கி நின்று, விபூதியை எடுத்து கீழே சிந்தாமல் வலது கையின் ஆட்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் ஆகியவற்றால் எடுத்து அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி அண்ணாந்து நெற்றியில் பூச வேண்டும். “திருச்சிற்றம்பலம்”, “சிவாயநம” என்று சொல்லி அணிந்து கொள்வது நல்லது. காலையில், மாலையில், படுக்கச் செல்லும்போது, வெளியே கிளம்பும் போது திருநீறு தரிக்க வேண்டும். படுத்துக் கொண்டோ அல்லது நடந்து கொண்டோ திருநீறு பூசக் கூடாது. சுவாமி முன்பும், குரு முன்பும், சிவனடியார் முன்பும் முகத்தைத் திருப்பி நின்று பூச வேண்டும். தலை நடுவில், நெற்றி, மார்பு நடுவில், இடது வலது மணிக் கட்டுக்கள், இடது வலது இடுப்பு, இடது வலது கால் நடுவில், முதுகுக்கு கீழ், கழுத்து, வலது காதில் ஒரு பொட்டு, இடது காதில் ஒரு பொட்டு என பதினெட்டு இடங்களில் திருநீறு தரிக்கலாம் என ஆகமங்களில் கூறப்படுகின்றன. ஒவ்வொரு இடத்தில் பூசும் பொழுதும் ஒவ்வொரு பலன்கள் பெறலாம். திருநீற்றைக் கொடுப்பவர் செய்த தவப்பயன், பூசைப் பலன்கள் ஆகியவை அதை வாங்குபவர்களுக்குச் சேரும் என்று அகத்தியர் கூறியுள்ளார். “ரூம் றீம் சிம்ரா” என்று கூறிப் பெரியவர்களிடம் திருநீறு வாங்கினால் அவரின் பரிபூரண ஆசியைப் பெறலாம். திருநீறு ஆன்மிக பலத்துக்கு மட்டுமன்றி ஆரோக்கியத்துக்கும் உகந்தது. மகிமை என்ற பொருளைக் கொண்ட விபூதியின் ஆற்றல் சிவனுக்கு நிகரானது என்கிறது திருஞானசம்பந்தரின் தேவாரம். தேவர்களும் ஞானிகளும் போற்றிய திருநீற்றை அணிந்து நாமும் வளமோடு வாழ்வோம்.

# அறிவோம் ஆன்மிகம்

**மாதா பிதா குரு தெய்வம் என்கிறோம். முதல் மூவரையும் தந்தது தெய்வம் தானே! அந்தத் தெய்வத்தை கடைசியில் வைத்தது ஏன்?**

தெய்வத்தின் பிரதிநிதியாகவே நமது மா, பிதா, பிதா குரு ஆகியோர் விளங்குகிறார்கள். இதையே “மாத்ரு தேவோ பவ”, “பித்ரு தேவோ பவ”, “ஆச்சாய தேவோ பவ” என வேதங்கள் போற்றின. கடவுளானவர் கடந்தும் உள்ளும் உள்ளார், அவரை அறிவது அவ்வளவு சுலபமானது அல்ல! நம் அன்றாட வாழ்க்கையில் பலவித கஷ்டங்களினால் குழப்பப்பட்டு, எதைச் செய்தால் இன்பமயான வாழ்வு பெறுவோம் என்று ஏங்குகிறோம். “எதைத் தின்றால் பித்தம் தெளியும்” என்று வேடிக்கையாகச் சிலர் கூறுவதும் உண்டு. இது போன்ற கலிகாலத்தில், எளிமையாகக் கடவுளின் ஆசிகளைப் பெற நமது நமது தாய் தந்தை குரு அவர்களை வணங்கி அவர்களின் சொற்படி நடந்து கொண்டால் போதும்.

நாங்கள் அவசரமாக பணம் எடுக்க வேண்டும். வங்கிக்குச் செல்ல நேரமில்லை. உடனே என்ன செய்கிறோம்? இங்கு தானியங்கி ஏ.டி.எம் கருவி இருக்கிறது. அந்தக் கருவி அருகில் எங்கு இருக்கிறதோ அங்கே நமது வங்கி அட்டையைப் போட்டு அதன் மூலம் நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறோம். நீங்கள் எங்கு பணம் எடுத்தாலும், பணம் போட்டாலும் நீங்கள் எந்த வங்கியில் கணக்கு ஆரம்பித்தீர்களோ அங்கு அந்த வரவு, செலவு பதிவாகிவிடும்.

ஒன்றுமில்லை. இப்போது சமையல் “கேஸ்” பதிவு செய்யக்கூட நாங்கள் நேரில் செல்ல வேண்டும் என்றோ, தொலைபேசியில் அங்கு வேலை செய்பவரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்றோ அவசியம் இல்லை. நாங்களே ஒரு பதிவு செய்யப்பட்ட தொலைபேசி

எண்ணுக்கு எங்களின் கோரிக்கையை வைத்தால், சில நாள்களில் அவை நிறைவேற்றப்டுகிதா இல்லையா?

இதே போன்று, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் அருளை எளிமையாகவும் விரைவாகவும் நிறைவாகவும் பெற, நமது தாய், தந்தை குருவின் ஆசிகள் இருந்தாலே போதும். தாய், தந்தை, குரு, தெய்வம் என்ற கணக்கில், முதல் மூவரை வணங்கிடின் உலகத்தின் உண்மையாம் தெய்வத்தை அடையலாம் என்பதனை நினைவுபடுத்த மாதா,பிதா,குரு, தெய்வம் என நமது முன்னோர்கள் அமைத்திருக்கிறார்கள்.

**பித்ரு சாபம், பித்ரு தோஷம் இந்த இரண்டுக்கும் என்ன பொருள்?**

பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய கர்மாக்களைச் சரிவரச் செய்யாமல் போனால், வீட்டுப் பெரியவர்களாக இருந்த பித்ருக்கள் வம்சத்தினருக்கு சாபம் கொடுப்பார்களா? அல்லது பித்ருக்களாகுமுன் உயிருடன் இருந்த காலத்தில் அவர்கள் செய்த தவறு, மற்றவர்களுக்கு இழைத் தீங்கு, தோஷம், சாபம் என்று சொல்வப்படுகிறதா?

"சாபம்" எனில் திட்டுதல், கெட்ட சொல், சபதம் என்றும், "தோஷம்" எனில் தவறு, குறைபாடு, நிந்தை, அசுத்தம், பாவம், குற்றம். கெடுதி, மறுத்தல் என்ற அர்த்தங்களிலும் பயன்படுத்தப் படுகிறது. "பித்ரு" எனில் தகப்பன் என்றும் இருமையில் தாயும் தகப்பனையும், பன்மையில் நமது முன்னோர்களையும் குறிக்கும்.

எனவே தங்களின் கேள்விகளிலுள்ள அனைத்துச் செயல்களுமே இந்த இரு வார்த்தைகளில் அடங்கும். நான் அண்மையில் எனது வீட்டு மொட்டை மாடியில் காக்கைக்குச் சாதம் இடச் சென்றேன். பொதுவாக எனது மனைவியே வைப்பார்கள். அன்று எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சாதத்தை அங்கு ஓர் இடத்தில் வைத்துவிட்டு, சிறிது தள்ளித் திரும்பிப் பார்த்தேன். சில நொடிகளில் அங்கு பார்த்தீர்களானால், காகங்கள் கூட்டமாக அந்த உணவைச் சுவைத்துக் கொண்டிருந்தன.

அப்போது, இந்தக் காகத்துக்கு இருக்கின்ற அறிவுகூட அற்றவனாக அல்லவா மனித இனம் இன்று இருக்கிறது என்று எனக்குத் தோன்றியது! "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என இராமலிங்க அடிகளார் கூறியதுபோல, நமது சாஸ்திரங்கள் எவ்வளவோ சொல்லியும் நாம் ஏன் எமது தாய் தந்தையரைக் கவனிப்பதிலிருந்து தவறுகிறோம்? எவ்வளவு பெரிய பாவம்! அவர்கள் இருக்கும்போது நம்மால் எந்த வகையில் அவர்களைத் திருப்தி செய்ய முடிகிறதோ, அதை நாம் தவறாமல் செய்ய வேண்டும். அவர்களின் காலத்திற்குப் பிறகு செய்ய வேண்டிய கிரியைகளையும் தவறாமல் செய்திடல் வேண்டும்.

தர்மம் என்று நமக்கு விதிக்கப்பட்டிருப்பின். அதைச் செய்யத் தவறினால், அந்தத் தர்மமே நம்மை அழித்துவிடும். இது போன்ற நமது தவறுகள் தவிர, எப்படி லௌகீக வாழ்க்கையில் நமது முன்னோர்களின் சொத்துக்களை நாம் பிரித்துக் கொள்கிறோமோ அது போன்று சில கர்மாக்களும் அந்தக் குடும்பத்தையே வாட்டுவதைக் காணலாம்.

இதற்கெல்லாம் மனதளவில் நாம் கடவுளின் அருளினாலும், நமது பக்தியினாலும் கண்டிப்பாக தற்போது அநுபவித்து வரும் இன்னலகளிலிருந்து விலகி வளமான வாழ்வைப் பெறுவோமென்று நம்பி தோஷங்களைப் போக்கக்கூடிய பரிகாரங்களைப் செய்வோம்; நல்வாழ்வைப் பெறுவோம்.

-நன்றி "அறிவோம் ஆன்மிகம்" நூலிலிருந்து



# கண்ணனும் தாத்தாவும்

**- முத்து -**

ஒரு குழந்தை எப்படிச் சுற்றி இருப்போர் எல்லோரையும் கட்டிப்போடுகிறது என்பது மிக அதிசயமானது. வீட்டில் இருப்போரை மட்டுமன்றி, வீட்டுக்கு வருவோரையும் தனது புன்சிரிப்பால் ஈர்த்துக்கொள்ளும் . வெளியிலே சென்றாலும், குழந்தை தனது தெய்விகத் தன்மையாலோ என்னவோ எல்லோரையும் கவர்ந்துவிடும். அதனால் போலும், ஒரு கவிஞர், "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்று பாடினார். இப்போது கண்ணன் வீட்டிலும் எல்லோரும் எப்போதும் குழந்தை அமுதாவைப்பற்றியே பேசுவார்கள். குழந்தை நாளுக்கு நாள் வளர்ந்து வருவதால், ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக ஏதாவது செய்யும். இது கண்ணனை வியப்பில் ஆழ்த்தும்.

இந்த நத்தார் விடுமுறையில் தன் தங்கையை உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குக் கொண்டுசென்று காட்டவேண்டும் என்று கண்ணன் மிகவும் ஆவலாக இருந்தான். ஆனால், எதிர்பாராத விதமாகக் கொரோனா பரவும் வேகம் அதிகரித்து வருவதால், தளர்த்தப்பட்ட முடக்கம் மீண்டும் இறுக்கமடைந்தவிட்டது. இது கண்ணனுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது.

தாத்தா: என்ன கண்ணா! நத்தார் விடுமுறையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாய், இன்றிலிருந்த உனக்கு விடுமுறைதானே. ஏன் உற்சாகம் இல்லாமல் இருக்கிறாய்?

கண்ணன்: தாத்தா! இந்தமுறை தங்கச்சிக்கு முதலாவது நத்தார் என்பதால் நான் நன்றாகக் கொண்டாடி, உறவினர், நண்பர் வீடுகளுக்கெல்லாம் கொண்டுபோய்க் காட்ட ஆசைப்பட்டேன். ஆனால் திரும்பவும் கட்டுப்பாடு வந்துவிட்டதே!

தாத்தா: ஓ! அப்படியா சங்கதி? நீ நினைத்ததுபோலத்தான் நானும் உன் மாமா, பெரியம்மா வீடுகளுக்குப் போகலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நாங்கள் ஒரு திட்டம் போட, கடவுள் வேறொரு திட்டம் போட்டுவிட்டார் கண்ணா! என்ன செய்யலாம்?

கண்ணன்: இது எப்போதுதான் மாறும் தாத்தா?

தாத்தா: ஏதோ விஞ்ஞானிகள் இரண்டு வருடமாக எவ்வளவோ முயன்று மாற்றப் பார்க்கிறார்கள். குறைக்க முடிந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டது , ஆனால் திரும்பவும் கூடிவிட்டது. இனிக் கடவுள்தான் கருணை காட்டவேண்டும். நாங்கள் கடவுளைத்தான் பிரார்த்திக்கவேண்டும் கண்ணா. அவர்தான் பெரிய வைத்தியர். அவரால் மட்டுமே முடியும்.

கண்ணன்: அப்படியானால் நாங்கள் ஒவ்வொருநாளும் பிரார்த்திப்போமா தாத்தா.

பாட்டி: தாத்தாவக்கும் பேரனுக்கும் என்ன குறை? எதற்காகவோ இரண்டுபேரும் கவலைப்படுவதுபோலத் தெரிகிறதே! குழந்தை அமுதா நித்திரையான பின்தான் கண்ணனுக்குத் தாத்தாவுடன் பேச நேரம் கிடைத்திருக்கிறதோ!.

தாத்தா: தன் தங்கையைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறான் உன் பெயரன்.

பாட்டி: அது இயற்கைதானே. பல காலத்துக்குப் பிறகு ஒரு தங்கச்சி கிடைத்திருக்கு. அவளுடன் ஆசையாகப் பேசி விளையாடுகிறான். . அவன் உங்களுடன் முன்புபோலப் பேசவில்லை என்று ஏன் கவலைப்படுகிறீர்கள்?

தாத்தா: கண்ணன் சொன்னது என்ன என்றே கேட்காமல் நீர் உமது கற்பனையில் ஏதேதோ சொல்கிறீர்.

பாட்டி: என்னடா கண்ணா! தாத்தா என்ன சொல்கிறார்?

கண்ணன்: பாட்டி! நான் இந்தமுறை நத்தார் விடுமுறைக்கு அமுதாவைச் சொந்தக்காரர், நண்பர் வீட்டுகளுக்குக் கொண்டுபோய்க் காட்டவேண்டும் என்று ஆசையாகக் காத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இந்தக் கொரோனா இப்படிக் கூடிக்கொண்டே போகிறதே! அதுதான் எனகுக் கவலையாக இருக்கிறது. அதைப்பற்றித்தான் தாத்தாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

பாட்டி: ஓ! அப்படியா? எனக்குந்தான் கவலையாக இருந்தது. நானுந்தான் இந்தமுறை எங்கு போகலாம், சொந்தக்காரரைக் கூப்பிடலாம், விருந்து கொண்டாடலாம் என்று பல திட்டங்களுடன் இருந்தேன். நாமொன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றை நினைக்கிறது. கடவுள் ஒருவர்தான் இந்தப் பிரசினைக்குத் தீர்வு தரவேண்டும். மருத்துவ அறிவியல் மேதைகளையே குழப்பத்தில் விட்டுள்ளது இந்தக் கொரோனா!

கண்ணன்: அதைத்தான் தாத்தாவும் சொல்கிறார், நாங்கள் எல்லோரும் ஒவ்வொருநாளும் கொஞ்ச நேரம் உலக நன்மைக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று இப்போதுதான் சொன்னார்.

பாட்டி: அது நல்ல யோசனைதான். காஞ்சிப் பெரியவர்கூட மக்கள் எல்லோரும் உலக நன்மைக்காகக் கூட்டுப்பிரார்த்தனை செய்யவேண்டும் என்று சொலிலியிருக்கிறார்.

தாத்தா: மக்கள் பலர் கடவுளை மறந்ததானாலேதான் கடவுள் மக்களை நல்வழிப்படுத்த இப்படிச் சோதிக்கிறார்போல இருக்கிறது.

பாட்டி: மக்கள் விஞ்ஞானத்தினால் உலகில் எதையும் செய்யலாம் என்று நம்பினார்கள். இந்தத் தொற்றுநோயானது அவர்களுக்கு ஒரு பெரிய சோதனையாக வந்துவிட்டது.

தாத்தா: கண்ணா! மனிதர்கள் அதிகம் ஆசைப்படக்கூடாது. என்பதற்கு நான் முன்பு அம்புலிமாமாவில் படித்த கதையொன்று சொல்கிறேன் கேள்.

கண்ணன்: அது என்ன தாத்தா, அம்புலிமாமா?

பாட்டி: அது சிறுவர்களுக்கான ஒரு சஞ்சிகை (Magazine). புத்திமதி சொல்வதுபோலப் பல கதைகள் அதிலே பிரசுரமாகும் சிறுவர்கள் விரும்பிப் படிப்பார்கள். நானும் படித்திருக்கிறேன்.

கண்ணன்: கதைக்கு என்ன பெயர் தாத்தா?

தாத்தா: பேராசை பெருங்கேடு. கல்யாணபுரம் என்ற ஊரில் ஓர் ஏழைத் தொழிலாளி இருந்தான். அவன் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும் அவனுடைய குடும்பம் வசதியாக வாழ அவனின் வருமானம் போதவில்லை. மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாடு, உடை வாங்கக்கூட இயலவில்லை என்று குறைப்படுவான்.

கண்ணன்: ஏன் தாத்தா! அவன் அதிக வருமானம் வரக்கூடிய வேறு வேலை ஏதாவது செய்திருக்கலாமே!

தாத்தா: அவனிடம் வேறு வேலை செய்யக்கூடிய போதிய திறமை இல்லைக் கண்ணா! காட்டுக்குள் போய் விறகு வெட்டி வந்து ஊருக்குள் விற்பதே அவனுக்குத் தெரிந்த தொழில். அவன் ஒருநாள் விறகு வெட்டப் போனபோது ஒரு முனிவரைச் சந்தித்தான். அந்த முனிவரிடம் தனது குறையைச் சொல்லி அழுதான். அதற்கு அவர், கடவுளை வணங்கு. கருணைக்கடவுள் உனக்கு அருளுவார் என்று சொல்லிவிட்டு முனிவர் போனார்.

கண்ணன்: அவன் முனிவர் சொன்னதை நம்பினானா? கடவுளை வழிபட்டானா தாத்தா?

தாத்தா: ஓம்! அவன் அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் காலையில் வேலைக்குப் போகுமுன் கடவுளை மன்றாடிப் பிரார்த்தித்து அதன் பின்னரே விறகுவெட்டப் போனான்.

கண்ணன்: கடவுள் அவனுக்கக் காட்சி கொடுத்தாரா தாத்தா?

தாத்தா: பல மாதங்கள் அவன் தொடர்ந்து மனமுருகிப் பிரார்த்தித்தபின் கடவுள் ஒரு நாள் அவனிடம் வந்தார்.

கண்ணன்: எப்படி வந்தார் தாத்தா? முருகன் வடிவிலா சிவன் வடிவிலா?

தாத்தா: இல்லை, ஒரு முனிவர் வடிவில் வந்தார். விறகுவெட்டி அந்த முனிவரை வணங்கினான்.

கண்ணன்: அவர் என்ன கேட்டார் தாத்தா?

தாத்தா: மகனே! எதற்காக இப்படி ஒவ்வொருநாளும் கடவுளைப் பிரார்த்திக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன் தனது வறுமையைப் போக்க இதுதான் வழி என்று உங்களைப்போல வந்த ஒரு முனிவர் சொன்னார். அதன்படி நான் தவறாது அதைச் செய்கிறேன் என்றான் அவன்.

கண்ணன்: உடனே அவனுக்குப் பணப்பை ஏதாவது கொடுத்தாரா?

தாத்தா: அவர் தன்னிடமிருந்த ஒரு வெறும் பையைக் கொடுத்து இதனைப்பிடி. இதிலே சில பொற்காசுகள் போடுகிறேன். எடுத்துச் சென்று ஏதாவது தொழில் செய் என்றார். அவன் சந்தோஷமாக அந்தப் பையை வாங்கினான். அதிலே அவர் சில பொற்காசுகளைப் போட்டார்.

கண்ணன்: அவன் அப்போ சந்தோஷமாக வாங்கிக்கொண்டு போனானா?

தாத்தா: இல்லை கண்ணா, இன்னும் கொஞ்சம் தரும்படி கேட்டான். காசு நிலத்தில் விழுந்தால் மறைந்துவிடும் என்று முனிவர் அவனை எச்சரித்தார். ஆனாலும் அவர் போடப்போட அவன் ஆசையால் இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டேயிருந்தான்.

கண்ணன்: பை நிறைந்ததும் சந்தோஷமாக வீட்டுக்குப் போயிருப்பானே தாத்தா!

தாத்தா: அதுதான் இல்லைக் கண்ணா! அவன் மனம் திருப்திப்படவேயில்லை. முனிவர் போடப் போட அவன் கேட்டுக்கொண்டேயிருந்தான். முனிவரும் சிரித்தபடியே போட்டுக்கொண்டிருந்தார். அதிகம் போட்டதனால் பை கிழிந்து காசுமுழுவதும் நிலத்தில் சிந்தியது. உடனே பணம் முழுவதும் மறைந்துவிட்டது. முனிவரும் மறைந்துவிட்டார்.

கண்ணன்: முனிவரைத் தேடித் திரிந்தானா தாத்தா?

தாத்தா: இல்லை கண்ணா! அப்போதுதான் அவன், அங்கே வந்தது கடவுள் என்றும் தனது பேராசையால் தான் எல்லாவற்றையும் இழந்ததையும் தனது முட்டாள் தனத்தையும் எண்ணியபடி கவலைப்பட்டுக்கொண்டே தனது வீட்டுக்குப் போனான்.

கண்ணன்: பேராசை பெருங்கேடு என்பதை இந்தக் கதை நன்றாகவே விளக்குகிறது தாத்தா. தாத்தாவை ஒரு கேள்விக்குறியுடன் பார்த்தான் கண்ணன்.

தாத்தா: ஆனால் கொரோனாவுக்கும் இந்தக் கதைக்கும் என்ன சம்பந்தம் என்றுதானே யோசிக்கிறாய் கண்ணா!

கண்ணன்: ஓம் தாத்தா. நான் நினைத்ததை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள்.

தாத்தா: விஞ்ஞானம் வளர வளர பல தொழில்நுட்ப வசதிகளால் மக்களின் வாழ்க்கையில் பல விடயங்களையும் இலகுவாகச் செய்யக்கூடிய வசதிகளும் கூடிக்கொண்டே செல்கின்றன. இதனால் இயற்கை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டே வரு கிறது. அதன் ஒரு விளைவுதான் இந்தக் கொரோனாவும் அது எல்லோரையும் சிந்திக்க வைத்துள்ளது. ஏன் வந்தது? என்ன நடக்கிறது என்று மனிதர்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் மக்களின் திறமைக்கு அப்பால் ஏதோவொரு சக்தி இருக்கிறது என்று மக்கள் உணர்வதற்கு, அது கடவுள் சக்தி என்று அறிய இந்தக் கொரோனா உதவுகிறது.

கண்ணன்: நாங்கள் இன்றிலிருந்து பிரார்த்தனை தொடங்குவோம் தாத்தா!மற்றவர்களும் நீங்கள் சொன்னதுபோல கடவுளை வழிபட ஆரம்பிப்பார்கள் தாத்தா.

தாத்தா: தொற்று நோய் என்றபோது இன்னொரு விடயமும் ஞாபகம் வருகிறது கண்ணா! திருஞானசம்பந்தர் யாத்திரை போனபோது ஒரு ஊரில் அங்குள்ள எல்லோருக்கும் குளிர்சுரம் வந்திருந்தது. அப்போது சம்பந்தருடன் போன சிவனடியார்களுக்கும் தொற்றிக்கொண்டது.

கண்ணன்: அது எந்த ஊர் தாத்தா?

தாத்தா: திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்பது அந்த ஊரின் பெயர்.

கண்ணன்: பிறகு என்ன நடந்தது தாத்தா?

தாத்தா: சம்பந்தர்தான் கருணை உள்ளம் கொண்டவர் அல்லவா? உடனே அவ்வினைக் கிவ்வினை என்ற பதிகம் பாடினார். அதில் ஒவ்வொரு தேவாரத்தின் முடிவிலும் திருநீலகண்டம் (ஆணை - கட்டளை) என்று பாடினார். திருநீலகண்டப் பதிகம் என்று அதற்குப் பெயர். என்ன ஆச்சரியம், ஊர்முழுவதும் பரவியிருந்த நோய் மாறி விட்டது. அனைவரும் குணமாகிச் சுகமாக இருந்தார்கள்.

கண்ணன்: அப்படியென்றால் நாங்களும் அந்தப் பதிகத்தைத் தினமும் பாடலாம் தாத்தா!

தாத்தாவும் கண்ணனும் சம்பந்தரின் அந்தப் பதிகத்தைத் தமது தேவாரப் புத்தகத்தில் தேடுகின்றார்கள்.

பாட்டி: (குழந்தையைத் தூக்கிக்கொண்டு வருகிறா.) கண்ணா! இந்தமுறை போக முடியவில்லை. ஆனால் காணொளியில் அமுதாவைக் காட்டி மகிழ்வோம். கடவுள் அருளால் அடுத்தமுறை எல்லாம் சரியாகும் என்று நம்புவோம். அப்போது நேரே போகலாந்தானே.

கண்ணன்: குழந்தை கண்ணனைப் பார்த்துச் சிரிக்கிறது. கண்ணன் ஓடிச்சென்று குழந்தையை வாங்கிக் கொள்கிறான். ஓம் பாட்டி! நீங்கள் சொல்வது சரி, நல்ல யோசனைதான். அடுத்த கிறிஸ்துமஸ் விடுமுறை வரை காத்திருப்போம்.



## திருநீலகண்டப் பதிகம்

**திருச்சிற்றம்பலம்**

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீல கண்டம்

- திருஞானசம்பந்தர்

*தி -1, ப - 116, பா-1*

elakkiaonline.com

## *Order at our Sri Lankan and Indian online supermarket delivered to your doorstep*

- Sri Lankan and Indian Vegetables, Groceries
- Frozen Seafood & Fish
- Savoury Snacks
- Ready Meals




FREE DELIVERY ON ORDERS OVER £40

*Terms and conditions apply

**Wish you a very happy and prosperous new year**

www.elakkiaonline.com

Follow us on



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.